விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone 3411
நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சனிக்கிழமை 15உ சர்வஜித்து ஹ் ஐப்பசி மீ — Colombo, November 1, 1947 — ஹிஜ்ரி 1366 துல்ஹஜ் பிறை 17 | இதழ் 151

இந்தியா முழுவதும் படை திரட்டப்படும்!

காஷ்மீர் படையெடுப்பு நிலைமை

ஷேக் அப்துல்லா, மகாத்மா காந்தி அறிக்கைகள்:

ஜனப் ஜின்னு பேச்சும் பாக்கிஸ்தான் சர்க்கார் அறிக்கையும்

டாட்டா கம்பெனி டகோடா விமானங்களை அனுப்ப டில்லி உத்தரவு

புதுடில்லி, அக். 30

இந்திய சர்க்கார் நாடு முழுவதிலும் படை திரட்டும்படி கூடிய சீக்கிரம் உத்தரவிடுவார்கள் என்று தெரியவருகிறது. காஷ்மீர் சம்பவத்தை முன்னிட்டு இவ்வித நிலைமை ஏற்பட்டிருக்கிறது. படை திரட்டுவதற்கு அவசரச்சட்டம் தயாரிக்கப் பட்டுவருகிறது.

ஷேக் அப்துல்லா பிரகடனம்

காஷ்மீர் தேசிய மகாநாட்டுத் தலைவர் காஷ்மீரில் இடைக்கால சர்க்காரை நியமிப்பார். புதுடில்லியில் அவர் பண்டித நேருவுடனும் மற்ற தலைவர்களுடனும் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். படையெடுப்பு ஆபத்து நீக்கியதும் காஷ்மீர் இந்திய யூனியனில் சேருவது பற்றி பொது ஜனவாக்கெடுக்கப்படுமென்று அவர் தெரிவித்தார்.

மகாத்மா ஆதரவு

காஷ்மீர் சமஸ்தானத்தைக் காப்பாற்றுவதற்காக இந்திய யூனியன் அரசுப்புகளை அனுப்பியது சரியான செயல்தான் என்று மகாத்மாகாந்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் தெரிவித்தார். பாக்கிஸ்தான் உதவியின்றி மலை ஜாதியினர் சமஸ்தானத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்று தான் நம்பமுடியாதென்று கூறினார்.

லாகூர் மகாநாடு

லண்டன், அக். 30

இன்று காமன்ஸ சபையில் சாம்ராஜ்ய உறவு மந்திரி நோவல் பேக்கர் பின் வருமாறு அறிவித்தார்:-

ஜனப் ஜின்னுவும் பண்டித நேருவும் சந்தித்துப் பேசும் லாகூர் மகாநாடு சனிக்கிழமையன்று நடைபெறும். பண்டித நேருவின் தேக அசௌகியத்தின் காரணமாக வியாழக்கிழமை நடைபெறவிருந்த மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. இம் மகாநாட்டில் இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனும் பாக்கிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகானும் கலந்து கொள்வார்கள். அபாயகரமான பிரச்சினைப்பற்றி மகாநாட்டில் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி சமரசமானமுடிவு ஏற்படுமென்று கருதுகிறேன். போராட்டம் நேரிட்டால் பிரிட்டிஷ் துருப்புகள் எப்பக்கத்திலும் கலந்து கொள்ளாதென்று நான் உறுதி கூறுகிறேன்.

ஜனப் ஜின்னு பேச்சு!

லாகூர், அக். 30

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜின்னு இங்கு பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

கண்ணியம், வீரம், யோக்கியதை இவைகளை மீறிச் செய்யப்பட்டுள்ள சதிக்கு நாம் ஆளாகியிருக்கிறோம். பாக்கிஸ்தானை எவராலும் அசைக்க முடியாது. உலகத்தின் அனுதாபம் முக்கியமாக முஸ்லிம் நாடுகளின் அனுதாபம் நமது பக்கமிருக்கிறது. பாக்கிஸ்தானுக்கு ஊதவி செய்ய முன் வருகிறவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவோம். ஒவ்வொருவரும் இஷ்டம்போல பலாத்காரத்தில் இறங்கிவிடாது, பாக்கிஸ்தான் சர்க்காருக்குப் பலமளிக்கும் தூண்போன்றிருக்க வேண்டும்.

பாக்கிஸ்தான் சர்க்கார் அறிக்கை

கராச்சி, அக். 30

காஷ்மீர் நிலைபற்றி பாக்கிஸ்தான் சர்க்கார் 1200 வார்த்தைகளடங்கிய ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் தெரிவிப்பதாவது:-

மோசடியாகவும் பலாத்காரத்தின் நிமித்தமாகவும் காஷ்மீர் இந்திய யூனியனில் சேர்ந்திருப்பதை பாக்கிஸ்தான் சர்க்கார் அங்கீகரிக்க முடியாது. நேரிய முறையில் பாக்கிஸ்தான் காஷ்மீருடன் சமரசத்திற்கு வர செய்த முயற்சிகளை காஷ்மீர் புறக்கணித்து விட்டது. காஷ்மீர் பாக்கிஸ்தானுடன் நேசமாக இருக்க விரும்பியதில்லை. அக்டோபர் 15-ம் தேதியன்றே அது வெளியார் உதவியைக் கோர ஆரம்பித்துவிட்டது. காஷ்மீர் துருப்புகள் காஷ்மீரிலுள்ள முஸ்லிம் கிராமங்களையும் பாக்கிஸ்தான் எல்லையிலுள்ள கிராமங்களையும் தாக்கின.

காஷ்மீரத்திலிருந்து ஒரு லட்சம் முஸ்லிம்கள் அகதிகளாக பாக்கிஸ்தானில் வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இதனால் எதிரிகள் ஆத்திரங்கொண்டு படையெடுத்திருக்கிறார்கள். இந்திய யூனியன் துருப்புகள் காஷ்மீருக்கு அனுப்பப்பட்டதால் அவர்கள் மேலும் அதிகமான ஆத்திரங்கொண்டிருக்கிறார்கள்.

இந்திய துருப்புகள்

புதுடில்லி, அக். 30

இன்றிரவு ஸ்ரீநகருக்குப் பறந்து செல்ல இந்திய துருப்புகள் ஆயுதங்களுடன் டில்லி விமான நிலையத்திற்கு வந்தார்கள். போதிய விமானங்களில்லாதபடியால் இந்திய விமானப் பாதைகளில் ஓடும் டகோடா விமானங்களை டில்லிக்கு அனுப்பி வைக்கும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் விமானங்கள் காஷ்மீரிலுள்ள பிரிட்டிஷாரை வெளியேற்றிச் செல்கின்றன. அநேகமாக எல்லா பிரிட்டிஷாரும் வெளியேறி விட்டார்கள்.

இந்திய ராணுவ விமானங்கள் காஷ்மீருக்கு படையெடுத்தவர்களுடன் சேர வந்த மலை ஜாதியினரைத் துரத்தின.

டகோடா விமானங்களை அவசரத் தேவைக்கு டில்லிக்கு அனுப்பும்படி சர்க்கார் உத்தரவிட்டிருப்பதால், டாட்டா விமான சர்வீசைச் சேர்ந்த டகோடா விமானங்கள் இனி பாதைகளில் போக்கு வரத்து செய்யாதென்றும் விகிங் விமானங்களின் போக்கு வரத்து நடைபெறுமென்றும் டாட்டா விமானக் கம்பெனியார் அறிவிக்கின்றனர்.

பாரசீக பிரதமர் வேண்டுகோள்

டெஹ்ரான், அக். 30

பாக்கிஸ்தானில் அவதியுறும் முஸ்லிம் அகதிகளுக்கு பணமும் துணியும் அனுப்பி உதவி செய்யும்படி பாரசீக பிரதம மந்திரி பாரசீக மக்களுக்கு ரேடியோ மூலம் வேண்டுகோள் விடுத்தார். 50 லட்சம் முஸ்லிம் அகதிகள் உடமைகளை இழந்து தவிப்பதால் அவர்களுக்குஉதவி செய்யும் படி பாகிஸ்தான் சுகாதார மந்திரி கேட்டுக் கொண்டதற்கிணங்கி இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கத்தியவார் எல்லையில் பாக்கிஸ்தான் துருப்புகள்

முகாம்கள் நிறுவப்பட்டிருக்கின்றனர்

ராஜகோட்டை, அக். 30

கத்தியவார்—சிந்து எல்லைப் புறத்தில் பாக்கிஸ்தான் துருப்புகள் நடமாடுகின்றன. இப் பிரதேசங்களில் பாக்கிஸ்தான் சர்க்கார் அநேக ராணுவ முகாம்களை நிறுவியிருக்கின்றன. கராச்சியிலிருந்து ஜூனகத் சமஸ்தானத்திற்கு 7000 டன் உணவு தானியத்தையும் 250 டன் சீனியையும் ஏற்றிக் கொண்டு பாக்கிஸ்தான் கப்பலான 'பாரத் அலி' 'வெரவல்' துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

கத்தியவார் பிரதேசங்களை சுற்றிப் பார்வையிட்டு வந்த ஜூனகத் போட்டி சர்க்கார் உதவிக் கமிட்டித் தலைவர் திரு. காளிதாஸ் வெலத் பின் வருமாறு தெரிவித்தார்:-

ராணுவம் சேகரிக்கப்பட்டு வருகிறது. ஏராளமான வாலிபர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. 23 கிராமங்களைக் கைப்பற்றியாகி விட்டது.

உருளைக்கிழங்கு சப்ளையில் நெருக்கடி

அமெரிக்கா - கானடாவிலிருந்து தருவிக்க முயற்சி

கொழும்பு, அக். 31

இப்பொழுது இலங்கையில் உருளைக்கிழங்கு சப்ளையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அமெரிக்கா, கானடா முதலிய இடங்களில் இருந்து அவற்றைத் தருவிக்க லிசென்ஸ்கள் பெற முயற்சிப்பதாக உணவு கமிஷனர் திரு கே. ஆள்வாப் பிள்ளை தெரிவிக்கின்றார். மேலும் எகிப்திலிருந்து கிடைத்து வந்த உருளைக்கிழங்கு நிறுத்தப்பட்டு விட்டதனால் இன்னும் நெருக்கடி அதிகரிக்குமென்றும் இதனால் அமெரிக்காவிலிருந்து பழவகை இறக்குமதிக்குரிய லிசென்சுகளை ரத்துச் செய்ய ஆலோசித்துள்ளதாகவும்கூறப்படுகிறது.

பிக்குகளைத் தாக்கியதாக வழக்கு

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ. 1

தொராணை சந்தியில் செப்டம்பர் 14-ம் தேதி சட்ட விரோதமாக கூடி பிக்குகள் ராகுலா, ரேவத்தை ஆகிய இருவரையும் தாக்கியதாக என். டி. எடி பெர்னாண்டோ, ஜோன் பெரேரா, எஸ். சிங்கோ, எம். டி. பி. பெரேரா முதலியோர் மீதும் வேறு பலர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சிலர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்டிரேட் மேற் கொண்டு விசாரணையை நவம்பர் 20-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

வண்ணார்பண்ணை ஐக்கிய பண்டக சாலை

யூனியனில் கூப்பன் பொருள் வாங்க எதிர்ப்பு

யாழ்ப்பாணம், அக். 31

வண்ணார்பண்ணை ஐக்கிய சங்கப் பண்டகசாலையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் டாக்டர் கே. ராஜா தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் பண்டகசாலையின் நலத்தை உத்தேசித்து கூப்பன் பொருள்களை யாழ்ப்பாணம் ஐக்கியூனியனில் வாங்க முடியாதாகையால், கூப்பன் பொருள்களை பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்களிடமிருந்து வாங்கக்கூடியதான உரிமையை தங்கள் பண்டகசாலைக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. எஸ். பதஞ்சலி தலைவராகவும், திரு. எல். ஏ. கந்தப்பசேகரம், திரு. ஆர். செல்லையா முறையே காரியதரிசி, பொக்கிஷதார் ஆகவும் தெரியப்பட்டனர்.

ஆங்கில-சுவபாஷா ஆசிரியர்கள் வித்தியாசம்

நீக்குவதற்கு கல்வி மந்திரி வாக்குறுதி

நுகவெல-சிங்கள ஆசிரியர்கள் பேட்டி

கொழும்பு, அக். 31

மீரிகம, கிரகம, பொல்கொல, பலப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சி பெறும் கல்லூரிகளிலுள்ள ஆசிரிய மாணவர்கள், கல்வி மந்திரியாகிய மேஜர் ஈ. ஏ. நுகவெலயை நேற்று பேட்டி கண்டு, அரசினர் பள்ளிக்கூடங்களிலும், அரசினர் உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலுமுள்ள ஆசிரியர்களை சமமாக அரசினர் நடத்த வேண்டுமென வேண்டினார்கள்.

மேலும் அவர்கள் ஒரு வருடத்திற்குச் சம்பளத்துடன் ஆசிரியர்களுக்கு லீவு கொடுக்கப்படல் வேண்டுமென்றும் ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவையுள்ள ஆசிரியர்களுக்கும் உயர் கல்வி பெறுவதற்கு சம்பளத்துடன் லீவு கொடுக்கப்படல் வேண்டுமென்றும் கேட்டுள்ளார்களாம்.

திரு நுகவெல ஐந்து வருட சேவை முடிந்த ஆசிரியர்களுக்கு ஒரு வருடம் சம்பளத்துடன் லீவு, அல்லது இரண்டு வருடங்களுக்கு அரைச் சம்பளத்துடன் லீவு கொடுப்பதற்கு சம்மதித்துள்ளார் என அறியப்படுகிறது.

சுவ பாஷை ஆசிரியர்களுக்கும் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் ஒரு விதமான விதியாசமுமில்லாமல் நடத்துவதற்கு தம்மாலான வெல்லாம் செய்வதாக வாக்குறுதியளித்துள்ளாராம். அத்துடன் அரசினர் பாடசாலைகளுக்கும் உதவி பெறும் பாடசாலைகளுக்குமிடையில் இப்பொழுது இருந்து வரும் வித்தியாசங்களைத் தாம் நீக்கி விடுவதாகவும் கூறியுள்ளாராம்.

"பரிபூரண தொழிற் சங்க உரிமையே எமக்கு வேண்டும்"

மந்திரி சபைத் திட்டத்திற்குக் கண்டனம்

கொழும்பு, அக். 31

தொழிற் சங்க உரிமைகள் வழங்குவதாகக் கூறி எத்தனையோ நிபந்தனைகள் உள்ள ஒரு திட்டத்தை மந்திரி சபை உருவாக்கியிருப்பது நேற்று பலமான கண்டனத்துக்குள்ளாகியது. அரசாங்க குமாஸ்தாக்கள் யூனியனின் அரசாங்க ஸ்டோர்ஸ் கிளைக் கூட்டம் திரு ஜீ. ஈ. ரத்ன சிங்கம் தலைமையில் நடைபெற்றபோதே இக்கண்டனம் செய்யப்பட்டது.

வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ள குமாஸ்தாக்கள் யூனியன் உத்தியோகஸ்தர்களை உடனே எவ்வித நிபந்தனையுமின்றி வேலைக்குத் திருப்பி எடுக்குமாறும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டமைக்காகத் தண்டனைக்குள்ளாகியிருக்கும் குமாஸ்தாக்கள் மீதுள்ள தண்டனையை ரத்தாக்குமாறும் இக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

பரிபூரண தொழிற் சங்க, ஜனநாயக, அரசியல் ஜீவாதார உரிமைகளுக்காக இடைவிடாது போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

கொழும்பு, நவ. 1

மொரட்டுவையைச் சேர்ந்த ராவத்த லட்டை சொஸ்ஸா வீதியிலுள்ள திரு எஸ். எம். டி. மெல் என்பவர், கிராண்ட்பாஸ் வீதியைச் சேர்ந்த கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் திரு ஜி. தோமஸ் என்பவரை ஏமாற்றி செப்டம்பர் மாதத்தில் இருமுறை 25 அந்தர் 'ரைஸினை' என்னும் பொருளை [ரூ 887-50 மதிப்புள்ளது] வாங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தனா முன் விசாரணைக்குஎடுக்கப்பட்டது. வழக்குவிசாரணையை மாஜிஸ்டிரேட் நவம்பர் 14-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

ஹைதராபாத் பிரதமர் ராஜினமா

ஆங்கில அரசியல் ஆலோசகர் பிரிட்டன் திரும்புகிறார்

ஸர். சுல்தான் அகமதுவும் வெளியேற வேண்டுமென்று முஸ்லிம்கள் கிளர்ச்சி

ஹைதராபாத், அக். 30

ஹைதராபாத் சமஸ்தான பிரதம மந்திரியான சத்தாரி நவாப் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார். நிஜாம் மன்னர் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்.

மந்திரி சபை திருத்தியமைக்கப்படும். ஹைதராபாத்திலுள்ள அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 6 பேர்கள் மந்திரிகளாக நியமிக்கப்படுவார்கள். நிஜாமின் அரசியல் ஆலோசகரான ஸர். வால்டர் மாங்க்டன் இங்கிலாந்து செல்லும் பொருட்டு இன்று பம்பாய்க்கு வந்துவிட்டார். இந்த இருவரும் இந்திய யூனியனுடன் நிஜாம் ஒப்பந்தம் செய்துகொள்வதுபற்றி டில்லியில் சமரசப் பேச்சு நடத்தினார்கள். டில்லி தூதுக் கோஷ்டி அக்கட்சினர் பதவியிலிருந்து தன்னை விடுவிக்கும்படி அரசியல் ஆலோசகராகவே இருந்து வருவதாகவும் ஸர். மாங்க்டன் நிஜாமைக் கேட்டுக் கொண்டாராம்.

இந்திய யூனியனுடன் பேச்சு வார்த்தை நடத்த புதிய தூதுக் கோஷ்டி நியமிக்கப்படுமென்று தெரியவருகிறது. விளம்பரம், போலிஸ இலாக்காக்களின் மந்திரி நவாப் மோமின் இக் கோஷ்டித் தலைவராக இருப்பார். வெள்ளிக்கிழமை இக் கோஷ்டி டில்லிக்குப் புறப்பட்டுச் செல்லுமென்று தெரிகிறது.

நிஜாம் தூதுக் கோஷ்டி 27-ம் தேதியன்றே பேச்சுவார்த்தை நடத்த நகல் ஒப்பந்தத்தை எடுத்துக்கொண்டு டில்லி சென்றிருக்க வேண்டும்.

ஆனால் ஹைதராபாத் முஸ்லிம் கட்சியினர் பிரதம மந்திரி சத்தாரி நவாப் ராஜினாமா செய்யவேண்டுமென்றும் ஸர். மாங்க்டனும் ஸர். சுல்தான் அகமதுவும் ஹைதராபாத்தை விட்டு வெளியேற வேண்டுமென்றும் துண்டுப்பிரசுரங்களை வழங்கினார்கள். ஹைதராபாத் முஸ்லிம் மாணவர்கள் ஹைதராபாத் இந்திய யூனியனில் சேரக்கூடாதென்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சமஸ்தான காங்கிரஸ் கட்சியின் படி இந்து மாணவர்கள் பள்ளிக் கூடங்களைப் பகிஷ்கரிப்பதால் பள்ளிக்கூடங்கள் எல்லாம் வெறுமையாக இருக்கின்றன.

முஸ்லிம் கட்சி நேரடி நடவடிக்கைக் கமிட்டியின் சர்வாதிகாரியான திரு. அப்துல் ராவூப் பேசியபோது, ஹைதராபாத் தனி சுதந்திர நாடென்றும் அது இந்திய யூனியனுடனோ சர்க்காருக்கு அடிமையாகலாகாதென்றும் உயிரைக் கொடுத்து முஸ்லிம்கள் ஹைதராபாத் சுதந்திரத்தைக் காப்பாற்றுவார்கள் என்றும் தெரிவித்தார்.

வேலைக்காரராக வந்து வேவுபார்க்கும் கள்வர்கள்

போலிஸார் புலன் விசாரிப்பு

கொழும்பு, அக். 31

பங்களாக்களில் வேலைக்காக அமர்ந்து, பின்னர் அப் பங்களாக்களில் மிக சாமர்த்தியமான கொள்ளையை நடத்துவதில் கைகாரப் பேர்வழிகள் என்ற நம்பப்படும் இருவரைத் தேடிப்பிடிப்பதில் போலிஸார் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இவ்விருவரும் மலேய சமூகத்தினர் என்று எண்ணப்படுகின்றனர். இவர்கள் கடந்த இரண்டு மாதங்களாக தங்கள் லீலைகளைக் கறுவாக்காட்டுப் பகுதியில் நடத்திவருகிறார்கள். சாதாரணமாக நல்ல உடை உடுத்து களவுபுரியும் இந்த வினைகள்வர்கள் வெள்ளி நகைகள், விலையுயர்ந்த அடுக்கலைப் பாத்திரங்கள், ரேடியோக்கள் போன்றவைகளில் இதுவரை அதிகமாகக் கண்போட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவர்களது கோஷ்டியைச் சேர்ந்தசிலர் ஏற்கனவே சிறைச் சாலைக்குள் தள்ளப்பட்டு விட்டனர். கோஷ்டித் தலைவர்களே இப்போது தேடப்படுகின்றனர். இவர்கள் ஓர் காரை உபயோகித்து வந்ததாகவும் தெரிகிறது.

போலிஸார் ஊரூராக இவர்களைப்பற்றி சாதாரண உடையில் புலன் விசாரித்து வருகின்றனர்.

மானவர், ஆடவர், மகளிர் யாவரும் காலையிலெழுந்த வுடன் பார்த்து மகிழத் தக்கது

மெய்கண்டான்

திருக்குறட் கலண்டர்

களிப்புங் கவர்ச்சியும் விருப்புங் கொடுக்கும் நன் முன்மாதிரி.

1948-ம் வருடத்து மங்களகரமான மெய்கண்டான் திருக்குறட் கலண்டர், தமிழ் டயறிகளுக்கு இப்பொழுதே எழுதுங்கள் பிந்தினால் கிடைப்பதரிது.

No. 1 (சிவப்பு) 1க்கு ரூ. 1-75 முதுமொழிக் கலண்டர்

டயறிகள்

No. 1 டயறி 1-க்கு ரூ. 1-50

No. 2 திருக்குறள் டயறி 0-85

தொகையாக வாங்குபவர்களுக்கு கமிஷனுண்டு.

மெய்கண்டான்

அச்சியந்திரசாலை,

மட்டுவில், சாவகச்சேரி. P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதிகாரி ஒருவரின் ஆட்சியில் சனிக்கிழமை

உண்மைச் சுதந்திரம்-2

தமிழர்கள் சாதிப் பிரச்சினையைக் கிளப்பிக்கொண்டு வருகிறார்கள் என்ற ஓலமிடும் பெரும்பான்மையோருடைய போக்குகள் சிலவற்றைப்பற்றி நாம் குறிப்பிட்டிருந்தோம். அவர்களது மனப்பான்மையும், பிரசாரத் தன்மையும் ஹிட்லருடைய பிரசார மந்திரி கோயபெல்ஸின் முறைக்கு ஒத்திருப்பதைக் காணலாம். இங்கிலாந்து இந்தியாவில் பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் கைப் பொம்மையாக விளங்கும் ஜின்னா அவர்களின் பிரசாரம்போலிருக்கிறது தான் செய்யும் விஷமத்தைச் செய்துவிட்டு, தன்னைப் பிறர் கண்டிக்கப்போகிறார்களே என்றதை எண்ணி எதிரிகள் அடிக்கிறார்களே, எங்களைத் தன் புறத்தில் கொலை செய்கிறார்களே என்று உலகத்தாருக்கு ஓலமிடுவது ஒழுக்கமாகிவிட்டது.

அதுபோல் கொடி விஷயத்தில் சிங்கள சகோதரர்கள் செய்து வருவதைக் கவனிக்கலாம். மற்றோர் சம்பவத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது. இலங்கையில் பல தொழில்களிலும் ஈடுட்டிருப்பவர்களில் இந்தியரும் இலங்கையரும் உண்டு. இந்தியரும் இலங்கையரும் ஆசியாக்காரர்கள் என்பதை சாதாரண அறிவுடைய எவரும் மறுக்க முடியாது.

அப்படியிருக்க, ஆசியா தொழில் மகாநாட்டுக்கு யாரைப் பிரதிநிதியாக அனுப்பவேண்டுமென்ற பிரச்சினை கிளம்பிய காலத்தில் ஒரு சங்கம் மலையாளிகள் சங்கம். மற்றது இந்தியர்கள் சங்கம்; ஆகவே சிங்களவர்கள் சங்கத்தின் பிரதிநிதியை அனுப்பினேன் என்கிறார் திரு. குணசிங்கா. திரு. குணசிங்கத்தை எல்லோருக்கும் தெரியும். அவர் எவ்விதம் தொழிலாளர் தலைவராக வந்தார் என்பதும் தெரியும். மலையாளிகளையும், துறைமுகத்திலுள்ள இந்தியர்களையும் சேர்த்துக்கொண்டு பிறகு தன்னுடைய காடையர் கூட்டத்தைக்கொண்டு அவர்களை அமுக்கிப் பயமுறுத்தி முட்டிக்காசு வாங்கித் தலைவரானதும், துறைமுகத்திலுள்ள இந்தியத் தொழிலாளர்களை விரட்டியும், பிறகு மலையாளிகளை விரட்டக் கிளர்ச்சிசெய்து கலகம் ஏற்படும்வரை செய்த காரியங்களும் வாசகர்கள் அறியாததல்ல.

தொழிலாளி என்று பேசும் இடத்தில் இந்தியன், தமிழன், சிங்களவன், முஸ்லிம் என்ற பாகுபாடே இருக்கப்படாது என்ற கொள்கைதான் உலகத்தில் நடைபெற்று வருகிறது. அப்படியிருக்க இலங்கையில் உள்ள தொழில் மந்திரியுடன் வேகசெய்யக் கூடியவரின் மனப் போக்கைக் கவனியுங்கள். சிங்கக் கொடியைத் தவிர வேறு கொடியைப் பறக்க விடமாட்டேன் அப்படி ஏதாவது பறந்தால் அதை என் கூட்டத்தாரைக்கொண்டு பிடுங்கி எறியச் சொல்லுவேனென்று மார் தட்டிக்கொண்டு பேசியவர் தான் திரு. குணசிங்கா. இவ்விதமானோபாவத்தில் உள்ள மந்திரிகளின் நிர்வாகத்தில் சிறுபான்மையோர் வாழ்க்கை எப்படியிருக்குமென்பதைக் கவனியுங்கள்.

சாதித் திமிர் பிடித்த சிங்கள மந்திரிகளினிடையேயுள்ள ஓர் தமிழன் எவ்விதம் இருக்கிறான் என்பதைப் பாருங்கள். ஐப்பானுக்கு சாமான் கொள்முதலுக்காக ஆள் அனுப்பப் போகிறார்களாம். ஐப்பானுடன் வியாபாரம் செய்து அனுபவமுள்ளவர்களை அனுப்புவதா என்ற பிரச்சினையேயில்லை. யாராயிருந்தாலும் சிங்களவர்களாயிருந்தால் போதும் என்ற முறையில் நடந்து வந்திருக்கிறார் வியாபார மந்திரி, ஒரு வோட்டுள்ள தமிழனுக்கு மந்திரி பதவி கொடுத்த சிங்களக் கூட்டத்தாருக்குச் சலுகை காட்டுவது நியாயந்தான். இலங்கையில் மந்திரிகள் நிலைமையும், மனப் போக்கும் தஞ்சாவூர் அரசன் பெண்சாதியின தாட் சண்யத்திற்காக மைத்துனனை மந்திரியாக்கிய கதைபோலுள்ளது.

பெண்சாதியின் உபத்திரவப் தாங்கமாட்டாமல்மைத்துனனை மந்திரியாக்கி விட்டு ஒரு நாள் தன் பெண்சாதிக்கு அவளது சகோதரன் திறமையை விளக்கிக்காட்டினான் மகாராஜாமேல் மாடியில் உலாவிக்கொண்டிருக்கையில், தெருவில் 100 மாடுகளின் மேல் மூட்டைகள் போடப்பட்டு போய்க் கொண்டிருந்தன. மகாராஜா தன் மைத்துனனையும், பழைய மந்திரியையும் கூப்பிட்டு மாட்டுக் காவணம் என்னவென்று விசாரியுங்கள் என்றான். மந்திரியும் மைத்துனனும் சென்றார்கள். மைத்துனன உடனே திரும்பி வந்து, மாட்டின் மேலுள்ள மூட்டைகள் நெல்மூடை என்று பதில் சொன்னான். இவ்வளவு சீக்கிரத்தில் பதில் சொன்ன திறமையை ராணி மெச்சினாள். மகாராஜா மறுபடியும், அது என்ன நெல் என்று விசாரி என்றார். அதற்காக ஒரு தடவை ஓடி "சம்பா நெல்" என்று பதில் சொன்னான் மைத்துனன். "எவ்வளவு மூட்டை என்று விசாரி" என்றான அரசன். அதற்கொரு தடவை ஓடிப்போய் 200 மூட்டைகள் என்றான். இவ்விதமாக அம் மூட்டைகளைப் பற்றிய முழு விபரமும் அறிவதற்கு முன் 100 தடவை அரண்மனைக்கும் அந்த காவண மாடுகள் போகும் இடத்திற்குமாக அலைந்துகொண்டிருந்தான்.

ஆனால் மந்திரி போனவர் திரும்பி வந்தார். 200 மூட்டைகள் சம்பா நெல்விற்பனைக்காக திருவையாற்றிலிருந்து புதுக் கோட்டை போவதாகவும் விலை இன்னதென்றும், தேவையானால் வாங்கலாம் என்றும், நெல் நல்லதென்றும், அரண்மனைக் களஞ்சியத்தில நெல் குறைவாக விருப்பதால் அதை வாங்குவது நலம் என்று எண்ணி சந்தைப் பேட்டையில் மாடுகளை அவிழ்த்து விடும்படி சொல்லிவந்திருப்பதாகவும் கூறினார்.

மகாராஜா ராணியைப் பார்த்து உன் தம்பியின் மந்திரி உத்தியோகம் எப்படி என்றார். அதுபோல் இருக்கிறது நமது இலங்கை மந்திரி சபையின் கூற்று. எல்லாம் உறவின் முறையாலும், சுய நலக் கொள்கையாலும சாதி வெறிபிடித்துத் திரியும் மந்திரிக் கூட்டத்தாரின் ஆளுகை நிரந்தரமாகும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இந்த எதேச்சாதிகாரிகளின் கீழ்சிறுபான்மையோரின் தமிழன்கதியென்ன? அவன் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிக்கும் காலம் வந்துவிட்டது. அதைப் பற்றி யோசிப்போம்.

ஊமை எதிரியை மொழிபெயர்க்க ஆளில்லை

கொலைவழக்கு ஒத்திவைப்பு

களுத்துறை, அக். 30

களுத்துறை அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்த ஓர் கொலைவழக்கில் எதிரி காது கேளாத ஓர் ஊமையாய் இருந்ததால் விசாரிப்பதில் பெருஞ் சங்கடம் ஏற்பட்டு வழக்கு ஒத்திபோடப்பட்டது. சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் எதிரியின் பாஷையை மொழி பெயர்க்க ஆளில்லாத தால் வழக்கை நடத்துவது சாத்தியமில்லை எனத் தெரிவித்தார்.

வழக்கை ஒத்திப்போடுகையில் நீதிபதி மேல்க் கோர்ட்டில் இவ் வழக்கில் இ. எல். தில நாயக்கா வலஹண்டுவ என்னும் காலியில் உள்ள செவிடர், ஊமையர் மொழி பெயர்ப் பாளரால் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு கோர்ட் லிஜிதரிடம் சுப்ரீம் கோர்ட் ரிஜிஸ்டிராருக்கெழுதி பிக்கால் அட்டார்னி ஜெனரல் முதலியோரோடு ஆலோசித்து இப்படிப்பட்ட விஷயத்தில் முன்னைய வழக்கம் என்ன என்று விசாரித்ததறியும்படி குறிப்பிட்டார்.

குறித்த எதிரி புத்தி சுவாதீனத்தோடு இருக்கிறானு என்பதை ஆராயும்படியும் அவர் டாக்டருக்குக் கட்டளை யிட்டார்.

சீவியத்திற் கொவ்வாத சீர்கெட்ட கல்விமுறை

நாட்டின் முன்னேற்றத்திற்கு நாட்டமூட்டும் கல்வி தேவை

உல்லாச வாழ்க்கைக்கு உத்தியோக வேட்டையாடவே ஊக்கமளிக்கும் தற்காலப் போக்கு

சீர்திருத்தி அமைக்க தேசத் தலைவர்கள் முன் வருவார்களா?

(ஜி. பி. டி. என்.)

நம் நாட்டில் தற்போது கையாளப்படும் கல்வித் திட்டத்திலும், அனுஷ்டிக்கப் படும் பயிற்சி முறைகளிலும் பல குறைகளுண்டென்று பலரும் ஒப்புக்கொள்ளக் கூடும். ஆகவே, அவைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென நாம் விரும்புகிறோம். இவ்வித குறைகளெவையென ஆராயுமிடத்து பிரதானமாய் எவர்க்கும் தோன்றவது யாதெனில், கல்வியின் பொருளடக்கம் விரும்பப்படக்கூடிய அளவு உபயோகமற்றதாயும், நன்மை பயக்கும் திறன்மிக அற்பசொற்பமான தாயு மிருப்பதும், நாளாந்த சீவியத்துக்கும் படிப்புக்கும் யாதொரு தொடர்பில்லாமையுமே. அதிகம் சிலுசிலுப்பும் அற்ப பலகாரமும் தான் பெறுபேறுபோல் விளங்குகிறது.

நமது கிராமங்களில் பாடசாலைக்குப் போகும் சிறுவர்களை அவதானித்தால், பெருஞ் சுமையான புத்தகங்களையும் கொப்பிகளையும் சுமந்து செல்கிறார்கள். என்னென்ன நூல்களெல்லாம் அவர்கள் கையில் இருக்கின்றன! இலக்கியம், இலக்கணம், பூமி சாஸ்திரம், ஆட்சி நூல், சரித்திரம், இயற்கைசாஸ்திரம், அறவழி நூல், பூதவேதி நூல்கள் முதலிய அரும்பெரும் பாடங்களை யெல்லாம் கற்றுக் கொள்ளுகிறார்கள். தேகாப்பியாசமும் நேரருசியில் இடம் பெற்று, பயிற்றப்படுகிறது. சாரணரியக்கத்திலும் மாணவர் பங்கு பெறுகிறார்கள். இதெல்லாம் மகிழ்ச்சிதரக் கூடிய செய்திதான்.

அரசாங்கம் கல்வி விருத்திக்காக தொகையான பணத்தை வருஷா வருஷம் செலவு செய்கிறது. ஒவ்வொரு கல்விஸ்தாபனமும் பல பரோபகாரரிட மிருந்து பண உதவி பெற்று புதுக் கட்டிடங்களமைக்கிறது களியாட்டமும் சங்கீதக் கச்சேரியும் வைத்து காசு சேர்க்கிறார்கள். ஒவ்வொரு மாணவனிடத்திலும் ஒவ்வொரு காலாண்டிலும் பாடசாலை முகாமைக்காரர் இரண்டு ரூபாய் வீதம் அறவிட்டு, பலவித விளையாட்டுகளையும் தொடங்கி நடத்துகிறார்கள். கல்வி இலாகாவின் உதவியைக் கொண்டு இலவச உணவும் ஒவ்வொரு நாளும் கொடுக்கிறார்கள்.

இத்தகைய சௌகரியங்களை அனுபவித்து வாழும் மாணவரின் பாடெப்படி? பையன் படித்த பாடமில்லை, உடம்பெடுத்த பாடுமில்லை. நாளாந்தம் வீட்டு வேலைகள் செய்வதிலோ அல்லது பெற்றோரின் விவசாய முயற்சியில் உதவி புரிவதிலோ அல்லது சமுதாய வளர்ச்சியிலீடுபட்டு உழைப்பதிலோ அல்லது தாம் ஈடேற்றமடைய எத்தனிப்பதிலோ – எதில் திறமை காட்டி சேவை செய்யத் தகுதியுள்ளவர்களாய் விளங்குகிறார் நம் மாணவர்? ஏன் அதைப்பற்றிப் பேசுவான், இவர்களிடத்தில் சீவியத்தின் மேன்மையான நோக்கமும் இல்லை; அதைப்பற்றி அக்கறையுமில்லை. பார்க்கத் தெரிந்தது படம், பாடத் தெரிந்தது சினிமாப் பாட்டு.

மாணவிகளின் மாண்பை யென்னென்று கூறுவோம் உடை நடை பாவனை வரவர மோசம். வீட்டுப்பணி விலக்கப்பட்ட கருமம் போலெண்ணி குனிந்தொரு துரும்புதானும் எடுக்கமாட்டார்களாம். வீடு தலையடைந்து நம் நாடு சிறந்து விளங்கும்போது, பலதுறைகளிலும் ஈடுபட்டுக் குறைவின்றி அரசியலை நடத்தப்போகும் மக்களை இவர்களா பெற்று வளர்க்கப் போகிறார்கள்? சந்தேகம்.

நமது மாணவரின் கல்வியின் நோக்கம் என்ன? கல்வி பயிலும்காலம் முடிந்ததும், நாளாந்தம் உல்லாசமாய் தாம் வீசிக்கக் கூடிய ஊழியம் கிடைக்கும் உத்தியோகம் பெறுவது தான். அது தப்பினால் முறையற்ற துணிவு வாணிபத்தில் ஈடுபடுவதுதான் அதுவுமில்லாவிடில் பெற்றோருக்குப் பாரமாயிருந்து, ஈனத்தை விளைத்துச் சீவிப்பதுதான்.

நம் சிறுவர்கள் பிற்கால சீவியத்தின் பொறுப்பை யுணர்ந்து நாட்டின் பொருளாதார, சமூக அரசியல் நிலையைச் சீர்ப்படுத்தியமைக்கப் பயிலவேண்டும். வாழ்க்கை நலத்தை விரும்பி, தாமும் பிறரும் முன்னேற்ற மடைவதெங்ஙனமென்று ஆராய்ந்தறிதல் வேண்டும். இவ்வித பயிற்சியை அவர்கள் பாடசாலையில் பெற்றுகொள்ளாவிடின், வேறெக்கே பெறக்கூடும்? கல்விக்கும் நாளாந்த சீவியத்துக்கும், கல்விக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் உள்ள இன்றியமையாத தொடர்பை நன்கு உணர்ந்தறிந்த பெரியோர், விரிவான ஏற்பாடுகளை இணைத்திருக்கும், விரிவான ஏற்பாடுகளை இணைத்திருக்கும்; நற்பலனளிக்கக் கூடிய பாடப் பொருட்ட வகையடங்கிய திட்டம் ஒன்றை தயாரித்து, இவ் விஷயத்தில் முயற்சி செய்ய வேணுமென்று கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தம்பதிகளைப் பிரித்த நாட்டிய வகுப்பு

விவாக ரத்துக்கு நீதிபதி அனுமதி

கொழும்பு, அக். 31

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த திரு. ஹெர்வின் ஆர். டி. ரொஸைரோ என்பவரின் மனைவி ஸ்ரீமதி நோமா பட்ரீஷியா டி ரொஸைரோ தமது கணவன் தம்மை விட்டுப் பிரிந்திருப்பதாக கூறி விவாகரத்துக் கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார். இவ்வழக்கில் எதிரி ஆஜராகவில்லை. கொழும்பு டில்டிரிக்ட் கோர்ட்டில் வழக்காளி சாட்சியமளித்கையில் தாங்கள் 1937 ஜனவரி 2-ம் தேதி விவாகம் செய்து கொண்டதாகவும் கணவனுக்கு நாட்டியத்தில் அதிக விருப்பமென்றும் நாட்டிய வகுப்பு நடத்திய காலத்தில் அங்கு வந்த ஒரு பெண்ணுடன் அளவுமீறிய தொடர்பு வைத்திருந்ததை தாம்கண்டித்த தாகவும் அதன்பின் 1946-ம் ஆண்டில் மார்ச்சு மாதத்தில் அவர் தம்மை விட்டுப் பிரிந்து விட்டதாகவும் தாம் திரும்பி வர மாட்டாரென்று தனக்கு கடிதமெழுதி வைத்திருந்ததாகவும் அழுகழுது சாட்சியம் அளித்தார். வேறு பலரும் சாட்சியமளித்த பின் நீதிபதி விவாகரத்து செய்து கொள்ள அனுமதியளித்தார்

16 பாக்கெட் கஞ்சா வைத்திருந்தார்

எதிரிக்கு ரூ. 250 அபராதம்

கொழும்பு, அக். 31

வாக்ஷால வீதியைச் சேர்ந்த எஸ். ஜெய் நூர் என்பவர் 16 பாக்கெட் கஞ்சா வைத்திருந்ததாக கலால் இலாகா இன்ஸபெக்டர் ஆர். ஜி. எஸ். டி. எஸ். இல்லே சிங்கா என்பவரால் குற்றம்சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கில் கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. வி. டி. பண்டித குணவர்த்தனா எதிரிக்கு ரூ. 250 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறின் 6 வாரச் சிறைத் தண்டனை யென்றும் தீர்ப்பளித்தார்.

எஸ்டேட்களுக்கு மருந்து சப்ளை

கண்டி ஜில்லா எஸ்டேட் முதலாளிகள்சங்கநிர்மாணம்

கண்டி, அக். 31

கண்டி ஜில்லா தோட்ட முதலாளிகள் சங்கக் கூட்டம் குயின்ஸ ஹோட்டலில் திரு. ஜே. மாக் மஹோன் தலைமையில நடைபெற்றது. எஸ்டேட்டுகளுக்கு மருந்து வகைகள் சர்க்காரால் சப்ளை செய்யப்படுவது சம்பந்தமாக ஒரு தகுந்த அதிகாரி விசாரணைகள் செய்துள்ளதாகவும் சராசரி 86 சத விகிதமருந்து வகைகள் இப்பொழுது சப்ளை செய்யப்படுவதாகவும் தலைவர் கூட்டத்தில் தெரிவித்தார். எஸ்டேட்டுகளில் மருந்து சப்ளை விஷயத்தில் முதலாளிகள் சிரத்தை எடுக்க வேண்டுமென திரு. எல். ஹோப் தெரிவித்தார். இதன் பின் வாழ்க்கைச் செலவு, ரப்பர் நிலைமை, ஆஸபத்திரிகளில் தொழிலாளர் நடத்தப்படும் முறைகள் முதலியனபற்றி ஆலோசிக்கப் பட்டன.

ஜெயில் கார்ட் கஞ்சா வைத்திருந்தார்

எதிரிக்கு ரூ. 75 அபராதம்

கொழும்பு, நவ. 1

வெளிக்கடை சிறைச்சாலையிலுள்ள எக்ஸ்ட்ரா ஜெயில் கார்ட் எம். எம். ஜே. வீரபஸ்ஸா என்பவர் ஐந்து பாக்கெட் கஞ்சாவை மறைத்து வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. வி. டி. பண்டித குணவர்தனா எதிரிக்கு ரூ. 75 அபராதம் விதித்தார்.

மகாநாட்டுக்குச் சென்றவர் திரும்பி வந்தார்

இவருக்கு மட்டும் டில்லியில் வசதியில்லையாம்

கொழும்பு, அக். 31

புதுடில்லியில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன ஆசிய பிரதேச மகாநாட்டுக்குச் சென்றிருந்த இலங்கைப் பிரதிநிதிகளுடன் முதலாளிகள் பிரதிநிதி ஆலோசகராகச் சென்ற திரு. சிரில் டி சொய்ஸா நேற்று மாலை கொழும்புக்கு விமான மார்க்கமாக திரும்பியிருந்தார். அங்கு தாம் தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் வசதியினமாக இருந்ததால் தாம் புறப்பட்டு வீட்டதாக அவர் தெரிவித்தார்.

இம்மகாநாட்டுக்கு சுமார் இருநூறுக்கதிகமான பிரதிநிதிகளும் ஆலோசனையாளர்களும் வந்திருப்பதாகவும் பல கமிட்டிகளாக பிரதிநிதிகள் பிரிக்கப்பட்டு வேலைகளைச் செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏழை பராமரிப்புச் சடடத்தில் திருத்தங்கள்

உடனடியாக செய்யும்படி திருச்சபை வற்புறுத்து

கொழும்பு, நவ. 1

இலங்கை தேவாலயங்கள் திருச்சபை கூட்டம் நேற்று முன்தினம் முடிவடையும் சமயத்தில் சில விஷயங்கள் எடுக்கப்பட இருந்தன. அதற்கு போதிய கோரம் இல்லாததினால் கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டது. இக்கூட்டத்தில் சமூக சேவை கமிஷனின் சிபார்சுகளைப் பாராட்டியதுடன் அவற்றை புதிய சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஏழை பராமரிப்புச் சட்டத்தை உடனடியாக திருத்தியமைத்து ஏழைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ராய்ட்டர் செய்திகள்

காலஞ் சென்ற ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மனைவி எலினர் ரூஸ்வெல்ட் பிரிட்டிஷ் மன்னர் குடும்பத்தினர் அனுப்பியிருந்த விவாக அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். இதற்குக் காரணம் ஐ. நா. சபையின் அமெரிக்கா தூதுக் கோஷ்டியில் அங்கத்தவராய் விளங்கும் அவருக்குள்ள வேலை தொந்தரவுகளேயாம்.

* * *

அரச குமாரியின் விவாகத்தின்போது கனேடிய பிரதமர் மாக்கன்ஸீ கிங் லண்டனில் சாம்ராஜயத்தலைவர்களைக் காண்பது மூலம் ஒரு சாம்ராஜ்ய மகாநாடு கூட்டப்படலாம் என்று நம்புவதாகக் கூறியுள்ளார்.

* * *

இந்திய சுகாதார டைரக்டர் ஜயராஜ் மேத்தா இந்தியாவில் 10 லட்சம் குஷ்டரோகிகள் இருப்பதாகவும் அவர்களில் 7 லட்சத்து 50 ஆயிரம் பேர் தொத்துநோயைப் பரப்பக்கூடிய மோசமான நிலையில் இப்பதாகவும் குறிப்பிட்டார். உலகில் மொத்தம 50 லட்சம் குஷ்டரோகிகளே இருப்பதால் இந்திய குஷ்டரோகஜனத்தொகை உலக மொத்த குஷ்டரோகிகளில் ஐந்தில் ஒரு பங்காகும்.

* * *

சீனாவில் உள்ள மஞ்சூரிய மாகாணத்தில் 2000 பேர் இது வரை பிளேக் நோயினால் மாண்டுபோனார்கள். இன்னும் நோய் அதிகமாகப் பரவிவருகிறது. கமியூனிஸட் நகரான ஹார்பினிலும் இந் நோய் தலை விரித்தாடத் தொடங்கியுள்ளது.

* * *

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தகர வர்த்தகர்களுக்கு 12 லட்சத்து 50 ஆயிரம் டொலர்கொடுப்பதற்கு சயாம் அரசாங்கம் சம்மதித்திருக்கிறது. இத் தொகை மேற்படி வர்த்தகத்தில் யுத்தத்தின்போது ஏற்பட்ட நஷ்டங்களுக்காகக் கொடுக்கப்படுவதாகும்

* * *

பிரான்ஸும் சுவீடனும் அடுத்தவருட ஐ. நா. சபையின் பொது சபைகூட்டம் ஐரோப்பாவில் நடத்தப்படவேண்டும் என்னும் ஓர் தீர்மானத்தைச் சமர்ப்பித் திருக்கின்றன. தலைமைக் காரியதரிசியும், ஒன்பது அங்கத்துவ தேசங்களின் கமிட்டியும் இடத்தைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்று இத்தீர்மானம் கூறுகிறது.

* * *

பிரிட்டன் பொருளாதாரத் துறையில் திணறிக்கொண்டிருப்பதால் ஆஸ்திரேலிய அரசாங்கக் கடற்படையின் பொறுப்பு அதிகரித்து விட்டது என ஆஸ்திரேலிய கவர்னர் ஜெனரலால் கூறப்பட்டது. பசிபிக் பகுதியில் பிரிட்டனின் பாதுகாப்பில் இனியும் தாம் நம்பிக்கைவைக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

சுயேச்சை தொழிற் கட்சி சமாப்தி

லண்டன், அக். 30

50 வருஷங்களுக்கு முன் பெர்னார்ட்ஷா முதலிய சமதர்மவாதிகளால் ஸ்தாபிக்கப்பட்ட பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சியைச் சேர்ந்த கடைசி அங்கத்தினரான திரு. ஜேம்ஸ் கார்மைக்கேல் இன்று அக்கட்சியிலிருந்து ராஜினமா செய்து தொழிற் கட்சியில் சேர மனுச் செய்திருக்கிறார். 1925ல் பார்லிமெண்டில் இருந்த 151 தொழிற் கட்சி அங்கத்தினர்களில் 106 பேர்கள் சுயேச்சைத் தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். 1930ல் அதைவிட்டு திரு. ராம்சே மாக்டொனல்டு ராஜினமா செய்து தொழிற் கட்சியில சேர்ந்ததும் மற்றவர்களும் ஒவ்வொருவராக அதைவிட்டு நழுவினர்கள்.

(ராய்ட்டர்)

தமிழ் பண்பாட்டின் மேன்மை

டாக்டர் சுப்பராயன் பிரசங்கம்

திருச்சி, அக். 30

"நான் மகாத்மா காந்தியின் சமாதான முறைமையைப் பின்பற்றுபவனாக இருந்த போதிலும் என்னுடைய அபிப்பிராயத்தில், மற்றதேசங்கள் பலாத்கார முறையில் இறங்கினால் அதை எதிர்ப்பதற்கு நாமும் தயாராக இருக்க வேண்டும். நம் தேச மக்கள் விஞ்ஞான சாஸ்திரத்தில் மற்ற தேசங்களிலும் பிற்பட்டவர்கள் அல்ல; நம்முடைய தேசம் மற்றதின் மேல் படையெடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் மற்ற தேசங்களின் படையெடுப்பை எதிர்ப்பதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். ஆகையினால் ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு நிரந்தர படை அவசியமாகும்" என்று சென்னை சர்க்கார் மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் ஒருச்சி செயின்ட் ஜோசப் காலேஜ் பரிசளிப்பு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:-

பழைய காலத்தில் சேர, சோழ, பாண்டிய பல்லவர்களின் புகழ் தமிழர்களுக்கே பெருமையளிக்கின்றன. பண்டைத் தமிழர்கள் கிரீஸ் முதலிய அந்நிய நாடுகளுடன் வியாபாரம் முதலிய தொடர்புகள் வைத்துக்கொண்டிருந்தனர். இனி பிற்காலத்தில் தமிழர்கள் செய்ய வேண்டிய முக்கியமான வேலைகள் பல இருக்கின்றன. வட நாட்டில் ஒருவரை ஒருவர் கொன்றுகொண்டிருக்கும் இச் சமயத்தில் தமிழ் நாட்டினர் ஒற்றுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இது தமிழ் நாட்டினரின் பிற்கால நலனைக் குறிக்கிறது. மேலும் வட நாட்டிலுள்ள நம் சகோதரர்களுக்கு ஒரு பாடத்தையும் கற்பிக்கின்றது.

"இரத்தம் சிந்தாமல் நாம் சுதந்திரம் அடைந்திருக்கிறோம். இது வரை மகாத்மா காந்தியின் கொள்கையைப்பின்பற்றி வந்திருக்கிறோம். அவர் விரும்பியபடி 125 வயது வரை அவர் உயிருடன் இருப்பார் என்று நான் நம்புகிறேன்."

தாம் மறுபடியும் இந்த மேல் நாட்டு கொள்கைக்கூட்டத்தினரால் ஏமாற்றப்படப் போகின்றோமா? அவர்களுக்கு நாம் கற்பிக்க வேண்டிய பாடம் ஒன்று இருக்கின்றது. அவைகளை சமாதானம், அவிம்சை உலகத்திலுள்ள தேசங்களுக்கிடையே உள்ள சச்சரவுகளை பஞ்சாயத்து மூலம் தீர்த்துக் கொள்வது முதலியனவேயாம். உலகத்திலுள்ள நாடுகளுக்கிடையே இந்தியா ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்குமேயானால், மகாத்மா காந்தியின் புத்திமதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, எல்லா தேசங்களுடைய சுதந்திரத்திற்கு மட்டுமல்லாமல் உலகத்தில் சமாதானத்தையும், மனிதர்களிடையே நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தவதற்கு ஏதுவாகுமென்பதில் சந்தேகமில்லை.

கலிங்கபட்டின துறைமுக அபிவிருத்திக்கு

ரூ. 16,000 செலவிடப்படும்

அசெம்பிளியில் மராமத்து மந்திரி அறிக்கை

சென்னை, அக். 29

இன்று அசெம்பிளியில் ஓர் கேளவிக்குப் பதிலளிக்கையில் பொது மராமத்து மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் கூறியதாவது:- கலிங்கபட்டின துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போதுள்ள பீச்சில் சிமின்ற் காங்கிரீட் வேலைக்காக ரூ. 16,000 செலவில் ஓர் திட்டத்தை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் இவ்வேலை ஆரம்பமாகும். இதைத் தவிர ரூ. 77 லக்ஷம் செலவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இதர திட்டங்களும் உள்ளன. இவைகளை அங்கீகரிப்பதுபற்றி பிறகு ஆலோசிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கக் கொடியை தேசீயக் கொடியாக்குவது தர்மமல்ல!

அது யூ. என். பி.யின் அரசியல் ஆயுதம்

சர்வதேச நிலையை அனுசரித்து நாட்டு மக்கள் அனைவரும் ஏற்கும் தேசீயக் கொடியே தேவை

பிடிவாதம் செய்தால் பேராபத்து உண்டாகும்

உலகத்திலுள்ள சகலமும் பரிணும தர்மத்திற்குள் அடங்கியிருகின்றன. அதன்படி காலப்போக்கில் மனிதனும், அவனின் மனோபாவங்களும் பழக்க வழக்கங்களும் மாறுற மடைகின்றன. மனித சமுதாயத்தின் உன்னதமான லட்சியங்கள் சிற்சில சமயங்களில் - மாறிவரும் உலகப்போக்கில் - பின் தள்ளப்படுவது போன்று, முன்னேறிச் செல்லும் சந்தர்ப்பங்களும் பலவுண்டு. முன்னேறும் சமுதாயத்திற்கு பயங்கரமானபிற்போக்குச் சக்திகளால் ஆபத்து உண்டாகிறது. எனவே தான், ஆபத்துக்களை விலக்கிச் செல்வதில் விவேகமற்ற வேகமாய் சமுதாய மக்கள் சென்றுவிடக்கூடாது. இப்படியாய் விட்டால் முன்னேற வேண்டிய சமுதாயம் ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்துவிடும்!

* * *

அறிவுள்ள மனிதனோ, ஒரு கூட்டமோ, சமூகமோ சூழ் நிலையின்மாற்றத்தை ஏற்குமா-என்ன? ஒரு தேசத்தின் அரசியல் - பொருளாதார - தொழில் - வர்த்தகத் துறைகளிலும், சமூகத்தின் கலாச்சாரம் - நாகரீகம் - அபிலாஷைகள் சம்பந்தமாகவும் விலக்கமுடியாத-காலந் தாழ்த்தாத பல மாற்றங்கள் ஏற்படுகின்றனவே. இந்த பிரமையான சந்தர்ப்பங்களில் ஒரு மனிதனின் தனிப்பட்ட அபிலாஷை ஒரு சமூகத்தின் லட்சியமாக மாறிவிடுகிறது. இது அமைதியாய் வாழும் மக்களின் வாழ்க்கைக்குப் பெருந் தீயை மூட்டிவிடும். ஆனபடியால் இச்சமயத்தில் தேசத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் அறிவாளிகளும் ஒன்றுசேர்ந்து ஆவன செய்யவேண்டும்.

* * *

இப்படியான சமயத்தில் தான் இலங்கையர்களான நாம் ஜீவிக்கிறோமென்பதாக தெரிகிறது. பாருங்கள்! நம் நாட்டில் தற்போது தேசியக் கொடிப் பிரச்னை பலதரப்பட்ட சமூக மக்களிடையே பெரியவோர் சிக்கலான நிலைமையை உண்டாக்கியிருக்கிறது.

* * *

"சிங்கக் கொடி" அல்லது 'சிக்களக்கொடி' யைசிக்களவர்களின் கொடியாக உரிமை கொண்டாடும் கூட்டத்தினரால் அது தேசியக் கொடியாய் இருக்கவேண்டுமென்று தர்க்கமும்கிளர்ச்சியும்செய்கிறார்கள். அதைத் தமிழர்களும் மற்றோரும் எதிர்க்கிறார்கள். இந்நிலையில், அறிவற்ற பாமர மக்களிடையே அபிமானமாய் தாண்டவமாட நேர்ந்து விட்டால், கொடிப் பிரச்னை வகுப்புக் கலவரத்திற்கு அடிகோலி விடுமென்றே அபிப்பிராயப்படுகிறேன். எனினும் சிங்களக் கொடியோ அல்லது வேறு கொடியோ தேச மக்களின் முன்னேற்றத்திற்கான அர்த்தமுடைய சின்னங்களாய் இருக்குமானால். அது தேசியக் கொடியாய் இருப்பதில் ஆட்சேபனையில்லை. சூழ் நிலையை அநுசரித்துப் பார்த்தால் தேசமக்களின் சுக க்ஷேமத்திற்கான லட்சியமுடைய அர்த்தம் என்னதான் சிங்கக் கொடியில் இருக்கிறது?

ஆயிரக்கணக்கான வருடங்கள் சென்ற பழைய நினைவுகளைக் கொடி யென்றதற்காக, இங்கிலீஷ்காரர்கள் இத்தேசத்தை ஆக்கிரமித்து அடிபணியச் செய்தபோது கண்டி ராஜதானியில் பறந்த கொடி என்ற தற்காக, அதிரணத்தால் அவதியுறும் சில பெரிய மனிதர்களின் அறைகூவலுக்காக, யூ. என். பி. யின் அரசியல் ஆயுதமாக இருந்ததற்காக, பழைய சிங்கக் கொடியை இன்னும் தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வது முற்றும் சுபாவ தர்மத்திற்கு முரணுகும் ஆனபடியால் தேசமக்களின் மனோபாவத்திற்கும், முன்னேற்றத்திற்கும் ஐக்கியத்திற்கும், அபிமானத்திற்கும் உகந்த முறையில் காலப்போக்கையும், சர்வ தேச நிலைமையையும் அனுசரித்தே "தேசியக் கொடி" எப்படியிருக்கவேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும்.

* * *

மற்றப்படி கையில் வரலேந்திய (இயற்கையில் இல்லாத) சிங்க ரூபத்தைப் பொறித்த கொடியை அறிவுள்ள மக்கள் வாழும் இந்தக் காலத்தில் இலங்கையைப்போன்ற தேசத்திற்கல்ல அபிசினியாவுக்குத்தான்; பொருந்துமாவென்று தீர்மானிப்பது மிகவும் சிரமமேயாகும். அதுவும், சிங்கத்திற்கு வாலோ அம்போ பிடித்து மூன்று காலில் நிற்பதென்றால் முடியுமா? முடியாதாகையால், வாளைக் கையிலேந்தி ரௌத்ரகாரமாய் வாயைப் பிளந்து நாக்கை நீட்டி இரை தேடி மோப்பம் பிடிக்கும் மிருகத்தின் சின்னத்தையுடைய ஒரு கொடியை புராதனமானது என்றதற்காக தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளும் மனிதர்கள் இலங்கையிலேயன்றி வேறு தேசத்தில் இருக்க முடியுமா?

* * *

பழைய சமுதாய நிலைமையை பரம்பரை பரம்பரையாக அறிந்துகொள்ள வேண்டியது மாமூலாய் இருப்பது ஒருவகையில் ஏற்கத் தக்கதுதான். எனவே புராதன வஸ்துக்களையும் சின்னங்களையும் சேமிக்க வேண்டியதும் அவைகளை பாதுகாக்க வேண்டியதும் அத்தியாவசியமாகும். புராதனமானவைகளை அலட்சியம் செய்யாமல் காப்பாற்றிக்கொண்டால்தான் பண்டைக்கால சமுதாய நிலைமை சமூக வாழ்க்கை முதலியவைகளை நாம் அறிந்துகொள்ள முடியும்.

எனவே சிங்களக் கொடியை இப்பொழுது புராதன வஸ்துவாக கௌரவிப்பதிலும் காப்பாற்றுவதிலும் தர்க்கம்வேண்டாம்; குற்றமுமில்லை. புராதன சின்னங்களையும் பொருட்களையும் காட்டி பொது மக்கள் முன்னிலையில் பலத்த கோஷம் செய்வதினால்பொதுமக்களிடையே பிரமையுண்டாகுவதேயன்றி வேறு பிரயோஜனமில்லை ஆகையால், சிங்களக் கொடியை பத்திரமாக கொழும்பு நாதனபொருட்காட்சிச் சாலையில் வைப்பதே நாம் அக்கொடிக்கு செய்யும் கௌரவமாகுமென்று நான் கூறுகிறேன்.

டலம் பொருந்திய எதிர்கட்சியர் இருக்கும் போது, சிங்களக் கொடியை தேசியக் கொடியாக்குவது சமயோ தபுத்தியல்ல; இதில் அர்த்தமில்லை; இதனால் வகுப்புக் கலவரங்கள் உண்டாக வழியேற்பட்டுவிடும். இக்கொடிப் பிரச்னை தற்போது உடனடியாக தீர்க்கப்படவேண்டுமா என்பது முக்கிய பிரச்னை.

இதற்காக ஒருவரோடொருவர் மூட்டிக்கொள்ளவோ, சண்டை சச்சரவோ போட இது சந்தர்ப்பமல்ல. இதற்குப் பதிலாக மக்களின் வாழ்க்கைத் தேவைக்காக போராடவேண்டும். மிகவும் பயங்கரமானபொருளாதார மந்தமும் வேகமில்லாத் திண்டாட்டமும் நம்மை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. ஏழை மக்கள் உணவும் உடையும், சுற்றிக்கொள்ள இடமும் இன்றி பஞ்சபாத பாடுபடுகிறார்கள். பஞ்சத்தின் கோரதாண்டவம் கண்முன்னே தெரிகிறது. எனவே உயிர் வாழ்தலின் மீது ஆவலுள்ள சமுதாய மக்கள் வாழ்க்கைத் தேவைக்காக போராட வீறு கொண்டெழுங்கள்!

* * *

சரி - பிழை என்பதற்குக் கூட காலதேச வர்த்தமானத்தை யொட்டாத அர்த்தமில்லை ஒருசமயத்து நிபுணத்துவம் இன்னொருசமயம் மடமையாகலாம். ஒரு சமயத்து குயுக்தி இன்னொருசமயத்தில் யுக்தியாகலாம். ஆனபடியால் பொறுப்புள்ளவர்கள் அவசரப் பட்டு பொது மக்களுக்கு ஆவேசத்தை உண்டாக்கி விடுவது பெரியதோர் தேசத் துரோகமாகும்.

* * *

எனவே நாகரிகமுள்ள மக்களாக, சுதந்திரமுள்ள பிரஜைகளாகநாம வாழவேண்டின் எங்கள் தேசத்திற்கும் ஒரு கொடி இருக்க வேண்டும். காலரீதிக்கேற்றமுறையில் உன்னதமான லட்சியத்துடனும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

* * *

இப்பொழுது இடதுசாரிகள் உபயோகிக்கும் அரிவாளும் சுத்தியலும் சின்னமாகப் பொறிக்கப்பட்ட கொடியில் எவ்வளவோ உன்னதமான லட்சியமும் உயர்ந்த கருத்துக்களும்அடங்கியாய் இருக்கிறது. நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்யும் விவசாயிகளின் சின்னம் அரிவாள். கைத்தொழில் செய்யும் தொழிலாளர்களின் சின்னம் சுத்தியல். இவ்விரு சின்னங்களும் சேர்ந்து, விவசாயிகளினதும் தொழிலாளர்களினதும் ஒத்துழைப்பால் மக்களின் வாழ்க்கைக்கு தேவையானவற்றை உற்பத்தி செய்யப்படுகிறதென முடிகிறது. விவசாயி-தொழிலாளியின் சிரமசக்தியேவாழ்வுலகத்தேவை. அதுவே உயிர் வாழ்தலின் லட்சியம்.

அரிவாளும் சுத்தியலும் பொருந்திய கொடியின் தாரதம்மியத்தை இத்தேச மக்கள் உணரவில்லை போலும்! எமது அபிப்பிராயப்படி, இத்தேசத்தின் தேசீயக் கொடியில் சிவனடிபாத மலையையும், உதய சூரியனையும், தென்னையும் சின்னமாகப் பொறிக்கப்படுவது உசிதமென்று ஆலோசனை கூறுகிறேன். இச் சின்னங்களையுடைய கொடியைத்தான் கண்டி நகர சபையும் "நகர சபையின் சின்ன" மாகப் பாவிக்கிறது. சிவனடிபாத மலையை சகல வகுப்பினரும் சமயத்தவரும் கௌரவிக்கிறார்கள். உதய சூரியன் இலங்கைக்கு மட்டுமல்ல; அகிலத்திற்குமே அந்தகாரத்தைப் போக்கி பிரகாசத்தைக் கொடுக்கிறது. தென்னையானது இலகையில் செல்வத்திற்கு மூலகாரணமாய் இருக்கிறது. எனவே இத்தேச சகல வகுப்பினருக்கும் யோக்கியமான சிவனடிபாத மலை, உதய சூரியன், தென்னை ஆகிய மூன்று சின்னங்களையுடையதாய் இருக்கட்டும் நமது தேசியக் கொடி.

மாஜி வியட்நாம் சக்கரவர்த்தினி ஜேன்-மாரியட்-குயன்-ஹூம-தி-லான், தமது மகனைப் பார்ப்பதற்காகப் பாரிஸுக்கு விஜயம் செய்துள்ளார். அவரது மகன் ஒரு பிரஞ்சுக் கல்லூரியில் கல்விபெற்று வருகிறார்.

[சிங்கக் கொடியே இலங்கையின் தேசீயக் கொடி என்று சிங்கள அரசியல் வகுப்புவாதிகள் செய்யும் கூச்சலை அது தப்பு என்று கூறும் உண்மைச் சிங்களத் தேசாபிமானிகளும் இன்று இல்லாமலில்லை என்பதை சென்ற புதன்கிழமை வெளிவந்த "தினகரன்" என்னும் சிங்களப் பத்திரிகையில் திரு. தீவானுவத்தே நந்தசிரி என்பவர் தமது கட்டுரை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

அக்கட்டுரையை "சுதந்திரன்" வாசகர்களுக்கு தமிழில் மொழி பெயர்த்து தந்திருக்கிறார் "ஏழுத்தமிழன்."]

ஆசிரியருக்குக் கடிதம்

நெல் வாங்கும் திட்டம்

ஐயா,

திரிகோணமலைப் பிரதிநிதி திரு. சு சிவபாலன் அவர்கள் உணவு மந்திரிக்குக் கொடுத்த விண்ணப்பத்தைவாசித்து இவ்வூர் வாசிகள் சந்தோஷப்படுவதுமல்லாமல் இதைக் கைவிடாது கடைசிவரை போராடுவாரென்று எதிர்பார்க்கின்றோம்.

இதற்கு ஆதாரமாக சில பல உண்மைகளை எடுத்தரைக்க விரும்புகின்றோம். உள்நாட்டு நெல் வேண்டும்திட்டத்தின்படி வருடமொன்றுக்கு திரிகோணமலையில் கிட்டத்தட்ட 60,000 புசல் கிடைக்கின்றது. விவசாயிக்கு இதனால் வருவது ரூ. 360,000. ஆனால் அரசாட்சியார் செலவழிப்பதைப் பாருங்கள்.

3 நெல்வேண்டும் உத்தியோகஸ்தருக்கு வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட சம்பளமாக ரூ. 10,800.

20 ஸ்டோர்அதிகாரிகள் வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ 36,000.

3 உணவுக்கட்டுப்பாட்டுசூப்பர் வைசர்கள் வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ 7200.

70 க்கு மேற்பட்ட காட்மார்கள் வருடமொன்றுக்குகிட்டத்தட்ட ரூ. 84,000.

40 க்கு மேற்பட்ட ஸ்டோர் காவல்காரர்கள் வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ 43,200

200 க்கு மேற்பட்ட களக் காவல்காரர்கள் வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ 192,000.

மொத்தம் கிட்டத்தட்ட ரூ. 373,200.

திரு சிவபாலன் கூறுவதுபோல் உள்நாடுகளில் அரிசி விலை 50 சதமும் அதற்குக் குறைவும். அதுவும் நிரப்பி அளக்கப்படும். ஆகையால் கள்ள விலை ஒரு புசல் ரூ. 7 ஆகிறது. அதாவது ரூ. 1 அரசாட்சியாரின் விலையில் கூடுதலாக

மேற் சொல்லப்பட்ட அனுவசியச் செலவுகளில்லாது விட்டால் தற்பொழுது விலையிலிருந்து ரூ. 6 அரசாட்சியார் விவசாயிக்குக் கூட்டிக் கொடுக்கலாம். இதில் அரசாட்சியார் ரூபா இரண்டை விவசாயிக்குக் கூட்டிக் கொடுத்தால் கூடிய நெல் அரசாட்சியார் வேண்டவும் கூடும். அரசாட்சியாரின் பொக்கிஷத்திற்கும் புசலுக்கு ரூ. 4 வீதமாக மிஞ்சுகிறது. இப்பணத்தை வேறு நல்வழியிலசெலவழிக்கலாம். கட்டுப்பாட்டுநிலையங்கள் இல்லாவிட்டால் உத்தியோகப் பற்றுள்ள சிலரும், தங்கள் சிநேகிதர் உறவினர் உத்தியோகமாக வேண்டுமென்று நினைக்கும் பலரும் கூறக்கூடும், "எங்ஙனம் உள்நாட்டு நெல் வேண்டும் திட்டத்தை நடாத்துவது என்று?" தற்பொழுது மேல் கூறப்பட்ட உத்தியோகஸ்தர்கள், தரகர்கள் போலிருக்கிறார்களல்லாது வேறு ஒன்றுமில்லை! கிராம விதானமார்களும் பிரிவு காரியாதிகாரியாலயத்திலிருக்கும் கிளார்க்கும், பிரிவு காரியாதிகாரியுமே வேலையை நடாத்துகிறார்கள். கச்சேரியிலிருக்கும் தலைமை உத்தியோகஸ்தர் நினைத்தநேரம் சட்டம் உண்டாக்காது ஒரே நிலையில் காரியத்தை நடாத்தினால் தானுகவே நடக்கிறது திட்டம். அரசாட்சியாருக்கு இனியாகுதல் கண் திறக்குமா?

மேலும் இந்நகரில் உள்ள உணவுக் கட்டுப்பாட்டு சோதனை நிலையங்களின் நிலைமையை சற்று ஆராய்வோம். தம் பலகாமம் கிராமத்திலிருந்து நகருக்கு வருவதற்கிடையில் இரண்டு சோதனை நிலையங்களிருக்கிறது. குறைந்தது ஒரு நேரத்தில் இரண்டிலும்பத்துப்பேருக்குக் குறையாதிருப்பார்கள் அதிகாரிகள். ஆனால் ஒவ்வொரு நாளும் நெல்லு களவாகநகருக்கு இந்த நிலையங்களை எவ்விதமோ தாண்டி வந்து சேருகின்றது. இது விந்தையாயிருந்தாலும்நடக்கும் ஒரு பிரபல உண்மை. இப்படி யெல்லாராலும் செய்யமுடியாதுதான்! எல்லாக்குதிரைகளும் "ஹோர்டில்ஸ்" பாயமுடிமா? இப்படியாகக் கொண்டு வரும் சிலர் எச்சிலவையும் போட்டு லாபம் கூட்டி 1 சேர் அரிசிரூ. 1-70 ஆகவிற்கிறார்கள். இந்தச் சோதனை நிலையங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இது நடந்தே தீரும். இல்லாவிட்டால் சில சமயங்களில் குறையக்கூடும். ஏனெனில், "மோட்டார் பெட்ரோல் போலிஸ்" எங்கு வந்து சேர்ந்துவிடுவரோ வென்று பயப்படக்கூடும். அதுவுமல்லாமல் அரிசிகளில் 75 சதத்திற்கு மேற்படாது என்பது எம் துணிபு.

மற்றது இங்கு ஒரு கட்டுப்பாடு நிலையத்திலிருந்து இருவரை ஒரே நாளில் நிற்பாட்டினார்கள். காரணம் ஒரு பெர்மிட் நேரம் தப்ப விடப்பட்டதென்று. ஆனால் அந்த பெர்மிட்டுக்கு பல முறை நெல் கொண்டு வரப்பட்டிருக்கும். இவையெல்லாம் மறுக்கப்படாத உண்மையாகவிருக்கிறது. மேற்சொன்ன இரு 'காட்'மாகும் தங்கள்விதிப்பணத்தைத் தரும்படி பின் சென்று அங்கிருந்த சகபாடிகளைச் சண்டைக் கிழுத்தனர் என்றும் கேள்விப் படுகிறோம்.

மேற்சொன்னவைகளை ஆராயுமிடத்து உணவுக் கட்டுப்பாட்டு சோதனை நிலையங்களால் ஒரு பிரயோஜனமுமில்லையென்பதை நன்குக அறியலாம். ஆனால் சிலருக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாட்சியாரின் நோக்கமாயிருந்தால் இன்னும் 20 நிலையங்களையும் உதவி உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கலாம். ஏனென்றால் திரிகோணமலையிலும் ஒரு குட்டி "கபினெட்" இருப்பதாக நாம் நினைத்து சந்தோஷப்படலாமல்லவா?

இங்ஙனம்,
எல்லாம் அறிந்தவன்.

திரிகோணமலை,
26-10-47

கொலை வழக்கில் எதிரி விடுதலை!

தற்காப்பின் நிமித்தமே திருப்பி அடித்தார்

மட்டக்களப்பு, அக் 29

இரு சகோதரிகளின் கணவன்மாருக்குள் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் சச்சரவு கடையில் ஒருவர் மரணத்தில் முடிந்தது. இது சம்பந்தமான கொலைக் குற்றச் சாட்டு வழக்கில் மட்டக்களப்பு நீதிபதி எதிரியை நிரபராதி என விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் சின்னத்தம்பி வேலப்பொடி என்னும் வேலு, கணபதிப் பிள்ளை தம்பிமுத்துவை மண்வெட்டி ஒரத்தால் தலையில் அடித்துக் கொன்றதாகக் கூறப்பட்டது. காலஞ் சென்றவர் தமது மனைவியின் சகோதரியின்கணவனுனவேலுவிடம் ஒரு கதவு நிலையைக் கொடுத்திருந்ததாகவும் அதை திருப்பிப் பெறுவது சம்பந்தமாகவே சச்சரவு ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

காலஞ்சென்றவர் எதிரியைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தி ஒரு பொல்லால் இடுப்பில் அடித்தாராம்.

தனது சொந்தப் பாதுகாப்பு நிமித்தமே எதிரி திருப்பிஅடித்ததாகவும் ஆகவே நிரபராதி என்றும் தீர்ப்புக்கூறப்பட்டது.

[ந-நி]

பதில் வெட்டுச் சித்திர நிபுணர்

டச்சு கோர்ட்டில் வழக்கு

ஆம்ஸ்டர்டாம், அக். 29

பூர்வீக சித்திரகலா நிபுணர்கள் வரைந்த சித்திரங்களை கொஞ்சமும் வித்தியாசமின்றி அப்படியே வரையும் ஆற்றலுள்ள 57 வயதுடைய மிகரன் என்னும் சித்திரக்காரர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. டச்சு சித்திர நிபுணர் லெர் மீது வரைந்த படங்களை அவர் வரைந்து அவைகளில் தனது பெயரை எழுதி விற்றதாக மிகரன் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. விசாரணையில் எதிரி வாக்கு மூலம் கொடுத்தபோது தான் எவ்வளவு உயர்தரமான சித்திரங்களை வரைந்து தனது பெயரை எழுதி விற்றுள்! அவைகளை ஜனங்கள் வாங்க விரும்பாத படியால் பூர்வீக நிபுணர்களின் சித்திரங்களை வரைந்து அவர்களது பெயர்களை எழுதி விற்றதாகக் கூறினார். (ராய்ட்டர்)

"அமிர்தப்ராஸ்" கருணைக்கிழங்கு லேகியம்.

காட்டுக் கருணைக் கிழங்கும் அநேக உயர்தர மூலிகைகளும் சேர்ந்தது. மூலமுளைகள், ரத்தம், சீழ்வடிதல், பவுந்திரம், வாய்வு, மூல உஷ்ணம் சுகமாகும்.

24 நாள் அமிர்தப்ராஸ் (காலை) ரூ. 4-8-0
" நாகபஸ்பம் (மாலை) " 5-0-0
மூலமுளைக் களிம்பு 1 புட்டி 1-0-0
(கேட்லாக் இலவம்) வி. பி. செலவு ரூபா 1-8-0

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி. (S India)

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-
அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
3, Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது


தாதுசத்துக்கள் நிறைந்த மேற்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனே
வினே
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில்வே அதிகாரியை அடித்ததாக வழக்கு

எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், அக். 31

சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். கதிரவேலு, கே. கப்பிரமணியம் ஆகிய இருவரும் சுன்னாகம் ரயில்வே நிலைய அதிகாரி திரு. எஸ். இரத்தினசிங்கம் என்பவரைத் தடிகொண்டு அடித்து காயம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டி சுன்னாகம் போலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் எம். மகாநாமாவினால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. ரி. வி. இராஜரத்தினம் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

திரு. இரத்தினசிங்கம் (வயது 23) சாட்சியமளிக்கையில் ரயில் வேஸ்டேஷனில் ஆகஸ்ட் 23-ம் தேதி இரவு தாம் அதிகாரியாகக் கடமையாற்றியதாகவும் அன்றிரவு சுமார் 11 மணிக்கு 3-வது வகுப்பு வண்டி பிரயாணிகள் இருக்கும் அறையில் சத்தம் அதிகமாக இருந்ததால் தான் அங்கு சென்று அங்கிருந்தவர்களைச் சத்தம் போடாதிருக்கும்படி எச்சரித்ததாகவும் இரண்டாம் முறையும் சத்தம் கேட்டதால் தாம் அங்குசென்று இரண்டாவது எதிரியை வெளியே செல்லுமாறு சொன்னதாகவும் அப்பொழுது தடியுடன் நின்ற முதல் எதிரி தமது கையில் தடியால் அடித்ததாகவும் இரண்டாவது எதிரி தமது முகத்தில் அடித்ததாகவும் கூறினார். தொடர்ந்து சாட்சியமளிக்கையில் ரயில்வேஸ்டேஷன் மாஸ்டரான சின்னத்தரை என்பவரின் உதவியுடன் எதிரிகளைத் தாம் கைது செய்து வைத்துக் கொண்டு போலிசாருக்குத் தகவல் கொடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

குறுக்கு விசாரணையின்போது இச்சம்பவம் நடந்ததற்கு முதல் எதிரிகளைத் தமக்குத் தெரியாதென்றும், இரண்டாவது எதிரியின் முகத்தில் டார்ச்லைட்டை தாம் அடித்துப் பார்க்கவில்லையென்றும் கூறினார்.

ரயில்வேயைச் சேர்ந்த எம். சின்னத்தரை [வயது 39] சாட்சியமளிக்கையில் அத்தினத்தன்று 3-வது வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில் சத்தம் கேட்டதால் திரு. இரத்தினசிங்கம் அங்கு சென்று சத்தமிட்டவர்களை அமைதியாக இருக்கும்படி கூறியதைக் காம் பார்த்ததாகவும் அவர்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு மீண்டும் சத்தமிட்டனர் என்றும், இரண்டாவது எதிரி திரு இரத்தினசிங்கத்தை தடியால் தாக்கியதை தாம் பார்த்ததாகவும், முதல் எதிரி திரு இரத்தினசிங்கத்தை இரண்டு கைகளாலும் அடித்ததாகவும் இரு எதிரிகளும் சாட்சியிருக்கும் இடத்திலேயே இருப்பவர்கள் என்றும் இரண்டாவது எதிரி சாட்சியத்தவரின் இனத்தவரென்றும் கூறினார்.

எதிரிகளின் பெயர் தமக்குத் தெரியாதென்றும் இரண்டாவது எதிரியே தம்மைத் தடி கொண்டு தாக்கியதாகவும்முதல் எதிரி கையால் தம்மை அடித்ததாகவும் விசாரணையின்போது திரு. இரத்தினசிங்கம் கூறினார்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் சாட்சியமெதையும் தாம் அழைக்கவில்லை என்று கூறி பதன்மேல் நீதிபதி திரு. இராஜரத்தினம் தீர்ப்பளிக்கையில் சாட்சியங்களின் முரண்பாடு காரணமாக இவ்வழக்கில் எந்த எதிரி அடித்தான் என்பதை அறியமுடியவில்லை எனக் கூறி எதிரிகளை விடுதலை செய்தார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து பால் உணவுப் பொருள்கள்

கொழும்பு, நவ. 1

கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று காலை வந்து சேர்ந்த "சுப்ரா" என்னும் கப்பலில் ஆஸ்திரேலியாவிலிருந்து பால் உணவுகள், டின்களில் அடைக்கப்பட்ட "பட்டர்" முதலியன (5623 டன்) வந்துள்ளன. இவற்றுடன் நேற்று காலை கல்கத்தாவில் இருந்து வந்த "ஒர்ஸா" என்னும் கப்பலில் 1000 டன் உணவுப் பொருட்கள் முதலியன வந்துள்ளன.

ஜவுளி வாங்குவதில் பொது மக்கள் கஷ்டம்

ஜப்பான் ஜவுளிக்குகூப்பன் இல்லாமற் செய்ய வேண்டுகோள்

கொழும்பு, நவ. 1

இப்பொழுது பொதுமக்களால் அதிகம் விரும்பப்படும் ஜவுளி வகைகள் பாடசாலை மாணவர்கள் கூப்பன்களுக்கே வழங்கப்படுகின்றன. இதனால் பொது மக்கள் மிகவும் கஷ்டங்களுக்குள்ளாகின்றனர் என்றும் எந்தக் கடைக்காயினும் அவர்கள் ஜவுளி வாங்கச் சென்றால் அங்குள்ளவர்கள் "பாடசாலை மாணவர்கள் கூப்பன்களுக்கு ஜவுளிவழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு இப்பொழுது விற்பனை செய்யப்படமாட்டாது" என்று கூறிவிடுகிறார்கள். இதனால் வெளி இடங்களில் இருந்து ஜவுளி வாங்கவரும் பலர்களும் திண்டாடவேண்டியிருக்கிறது.

இப்பொழுது பாடசாலை மாணவர்களுடைய ஜவுளிக் கூப்பன்கள் ஒரு பாயிண்டு 15 சதத்தில் இருந்து ரூ. 1-50-க்கு உயர்ந்துவிட்டது என்று கூறப்படுகிறது. மொத்தமாக உள்ள சுமார் 390 லட்சம் ஜவுளிக் கூப்பன்களில் 10 லட்சம் கூப்பன்களே பாடசாலைக் கூப்பன்களாகும். இவ்வித மிருந்தும் கெருக்கடி அதிகமாயிருக்கிறது.

மேலும் ஜப்பானிய ஜவுளி வகைகள் வாங்குவதற்கு கூப்பன்களை பொதுமக்கள் உபயோகிக்க விரும்புகிறார்களில்லையென்றும் ஜப்பானிய ஜவுளிகளை கூப்பன்கள் இல்லாது விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு வர்த்தகர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிகிறது

யாழ்ப்பாணப் பொருட் காட்சி சாலை

8000 பேர் இதுவரை விஜயம்

யாழ்ப்பாணம், அக். 30

செப்டம்பர் 10ல் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட தேசிய பொருட் காட்சிசாலைக்கு இது வரை 8000 பேர் விஜயம் செய்திருப்பதாக அறியப்படுகிறது.

கோர்ட்டடிக்குச் சமீபம் இருக்கும் இப்பொருட் காட்சி சாலையில் ஸர். வில்லியம் டுவைனத்தால் சேகரிக்கப்பட்ட பல பொருட்கள் இருக்கின்றன. இது தவிர பால் ஈ. பீரிஸால் அகழ்ந் தெடுக்கப்பட்ட கந்தரோடை பௌத்த சின்னங்கள் முதலியனவும் இருக்கின்றன. இச் சின்னங்கள் கி. பி முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று சொல்லப்படுகின்றன. (ந-நி)

டப்ளினில் குடியரசுக் கட்சி வெற்றி

டப்ளின், அக். 30

புதிய குடியரசுத் தலைவர் சின்-மாக்பிரிட்ஜ் டப்ளினில் நடைபெற்ற தேர்தலில் 29,197 வோட்டுகள் பெற்று வெற்றி வாகை சூடினார். இதன் மூலம் டி வாலரா தமது முக்கிய அரசியல் தோல்வி ஒன்றைப் பெற்றுவிட்டார். இன்னோர் தொகுதியிலும் குடியரசு வாதிகள் மிக நன்றாகப் போராடி இருக்கின்றனர். ஆனால் இதன் முடிவு இன்னும் தெரியவில்லை. இதன் பயனாக புதிய பொதுத் தேர்தல் சீக்கிரம் நடைபெறலாம் என்றும் ஒரு இடதுசாரி இயக்கம் ஜனநாயக வளரக்கூடும் என்றும் தெரிகிறது. (ராய்ட்டர்)

கல்கிசையில் ரூ. 1400 மதிப்பு சொத்து களவு

கொழும்பு, அக். 31

கல்கிசையில் திரு. டபிள்யு. ஏ. பார்ன்ஸ் சில்வா என்னும் சுமனராமா வீதியைச் சேர்ந்த வருக்குச் சொந்தமான ரூ. 1400 மதிப்புள்ள பொருள்களை திருடியதாக கையடையாளத்தின் மீது கைது செய்யப்பட்ட ஆர். எல். ஆண்ட்ரிஸ் என்னும் பேபிதாஸா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. டி. ஜே. ஆர். குணவர்தனு முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிபதி தொடர்ந்து விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

தோட்டத் தொழிலாளருக்கு புதிய சட்டம்

மூக்கூட்டு மகாநாட்டில் உருவாகும்

புதுடில்லி, அக். 28

1948-ம் ஜூ ஜனவரியிலோ அல்லது பெபரவரியிலோ தோட்டத் தொழில் சம்பந்தமாக ஒரு மூக்கூட்டு மகாநாட்டை இந்திய சர்க்கார் கூட்டும். அப்பொழுது இந்தியாவில் தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளருக்காக ஒரு புதிய ஏற்பாடு உருவாகும்.

கூலி நிர்ணயம், வைத்திய சிகிச்சை வேலை நிலைமை உட்பட பல விஷயங்கள் மகாநாட்டின் தற்காலிக விஷய அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. வைத்திய சிகிச்சை பற்றிய முழு அறிக்கையையும் சுகாதார இலாகா தயார் செய்து விட்டது.

அவசரமான விஷயங்களைப் பற்றி ஆலோசிக்க அடிக்கடி சந்திக்கக கூடிய ஒரு நிரந்தர கமிட்டியை நியமிப்பது பற்றியும் மகா நாட்டில் விவாதிக்கப்படும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டை அவமதித்தார்

தொழிற்கட்சி அங்கத்தினர் மேல் நடவடிக்கை

லண்டன், அக் 30

பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் புதிதி தெளிவற்றிருக்கிறார்கள் என்று எவரது பெயரையாமல் போதிய காரணமின்றி எழுதி பார்லிமெண்டை அவமதித்ததாக தொழிற்கட்சியைச்சேர்ந்த திரு கரி அலிகான் குற்றம் சாட்டப்பட்டார்.

திரு. அலிகான் தாம் குற்றவாளியென்பதைஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரினார். இக்குற்றச்சாட்டின் காரணமாக அவர் தமது பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

இதனால் நடைபெறும் உபதேர்தலில் அவர் கலந்து கொள்ளலாம் என்றும் அதில் வெற்றி பெற்றால் அவர் பார்லிமெண்டில் அங்கத்துவம் வகிக்கலாம் என்றும் அறியப்படுகிறது. (ராய்ட்டர்)

கடுகன்னுவை தேர்தல் ஆட்சேபமனு

கைவிட விரும்புவதாக மனுதார் விண்ணப்பம்

கொழும்பு, நவ. 1

கடுகன்னுவைத் தொகுதிக்கு அங்கத்தவரான திரு எச். ஆர். யூ பிரேமச் சந்திராவின் தெரிவை ஆட்சேபித்து திரு டி. வில்லியம் என்பவர் ஒரு மனுதாக்கல் செய்திருந்தார். இப்பொழுது தமது தேர்தல் ஆட்சேப மனுவை தாம கைவிட்டு விடுவதாக அவர் மனுச்செய்துள்ளார். தாம் குறித்துள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு தக்க ஆதாரங்களை எடுக்க முடியவில்லையென்றுஅன்று தெரிவித்துள்ளார். இதனை விசாரணை செய்ய பிரதம நீதிபதி, ஸர் பிரான்சிஸ் சூட்ஸ் என்பவரை நியமித்துள்ளார்.

கைமோசக் கொலைக்கு ஐவருக்கு சிறை

கொழும்பு, நவ. 1

தெலங்கபாதாவைச் சேர்ந்த ஜி டபிள்யு எட்மன் என்பவரைத் தாக்கிக் கொலை புரிந்ததாக டி. எச். எம். அப்பு, எச் ரானுரில், எச். எஸ். சிங்கோ. எச். டி. எட்மன், ஆர் டபிள்யு டான்னி என்னும் ஐவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்டவழக்கு கொழும்பு அசைஸஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் தாங்கள் கைமோசக் கொலை புரிந்ததாக ஒப்புக்கொண்டனர். முதல் எதிரி டி. எச். மானுயல் அப்பு இதற்குமுன்னும் பல குற்றங்கள் செய்திருப்பதை ஒப்புக்கொண்டார். நீதிபதி அவருக்கு 7 வருடச் சிறைத் தண்டனை விதித்ததுடன் மற்ற நால்வருக்கும் தலா ஒரு வருடச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

சகல ஜீவராசிகளை அழிக்க வல்ல ஆயுதங்கள

பல நாடுகள் தயாரிக்கின்றன

மாஜி கடற்படை அதிகாரி எச்சரிக்கை

நியூயார்க், அக். 30

பூமியிலிருந்து மனிதர், மிருகம், தாவரங்கள் இவற்றை அடியோடு அழித்துவிடக்கூடிய மிக்க அபாயகரமான ஆயுதங்களையும் நீண்ட தூரத்திற்கு அப்பால் பிரயோகிக்கக்கூடிய அவ்வித ஆயுதங்களையும் பல தேசங்கள் தயாரித்திருப்பதாக "யுனைட்டெட் நேஷன்ஸ் ஒர்ல்ட்" என்ற சஞ்சிகையில் ரியர் அட்மிரல் எல்விஸ் அசாரியாஸ ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அந்த ஆயுதங்கள் அமெரிக்காவின் ஏகபோகமாக மட்டும் இருக்கவில்லை, இதர நாடுகளும் அவ்வித அபாயகரமான ஆயுதங்களைத் தயாரிக்கின்றன.

பிரபஞ்ச அமைப்பின் அடிப்படையான கிரணங்களை ராணுவத்திற்கு பயன்படுத்துவதை ரஷ்யா ஆராய்ச்சி செய்துவருகிறது. பிரிட்டன் விமானமில்லாத ஆகாச வெடி குண்டுகள்பற்றி ஆராய்ச்சி செய்துவருகிறது.

அமெரிக்கா, ஜப்பானில் பிரயோகித்ததை விட 50 மடங்கு அதிக சக்திவாய்ந்த அணுகுண்டு ஒன்றை அபிவிருத்தி செய்துவருகிறது.

இவ்வித ஆயுதங்களைப் பிரயோகித்தால் பூமியில் எந்த ஜீவராசியும் நிலைக்க முடியாது.

இக் கட்டுரை எழுதிய ரியர் அட்மிரல் எல்விஸ் அமெரிக்க கடற்படையிலிருந்து விலகி ஓய்வெடுத்து வருபவர்.

இலங்கை இந்திய காங்கிரஸ தலைவர்

தமிழ் நாட்டில் பாராட்டுக் கூட்டம்

சென்னை, அக். 30

இலங்கை இந்தியன் காங்கிரஸ் தலைவரான திரு. சௌமிய மூர்த்தி தொண்டமானை வரவேற்க கண்டவராயன்பட்டியில் 27-ம் தேதியன்று ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. சின்னையா செட்டியார் தலைமை வகித்தார். திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான் இலங்கை பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது பற்றி அவரைப் பாராட்டி பலர் பேசினர்.

திரு விக்டோரியா விளம்பரம்

இலங்கை சென்ட் சபைக்கு திரு. ஜே ஏ. டி. விக்டோரியா அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருப்பதாக சென்னை பத்திரிகையின் செய்தி, விளம்பரமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பயிற்சி பெற்ற தாதிப் பெண்கள்

வைத்திய சபை பதிவு செய்ய சிபார்சு

கொழும்பு, அக். 31

இலங்கையிலே பயிற்சி பெற்ற தாதிப் பெண்களைப் பதிவு செய்துகொள்ள தகுதிவாய்ந்த ஸ்தாபனம் வைத்திய சபையே யென்றும், தாதிப் பெண்களைப் பயிற்சியளிக்கப்படுவது, அவர்களுக்கு பரீட்சைகள் வைப்பது முதலியன வைத்திய கல்லூரியின் சபையின் மேற் நடத்தப் படவேண்டுமென்றும் இலங்கை வைத்திய சபை சிபார்சு செய்துள்ளது.

பயிற்சி, பரீட்சைகள், பதிவு செய்தல ஆகியன சம்பந்தமாக வைத்திய சபைக்கும் இலங்கை வைத்தியக் கல்லூரி சபைக்கும் ஆலோசனைகள் கூறுவதற்கு நியமிக்கப்படும் கமிட்டியில் ஐந்து பதிவு செய்யப்பட்ட தாதிப் பெண்களும், சுகாதார மந்திரியால் நியமிக்கப்படும் இரு வைத்திய அதிகாரிகளும், கலவி மந்திரியால் நியமிக்கப்படும் இரு ஆசிரியர்களும் இருக்க வேண்டுமென்றும மேலும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அதிகாரி வீட்டில் கல்லெறி

ரங்கூனில் குழந்தைகள் கடத்தப்படுகின்றன

ரங்கூன், அக் 30

இன்று நான்கு பேர்கள் இரு குழந்தைகளைக் கடத்திச் செல்ல முயல்வதாக சந்தேகப்பட்டு ரங்கூனிலுள்ள பிரமுகர்கள் வசிக்கும் பிரதேசத்தில் சுமார் 1000 ஜனங்கள் கூடி அந்த நான்கு பேர்களையும் துரத்திச் சென்றனர். அவர்கள் பிரிட்டிஷ் விளம்பர இலாகா அதிகாரியான திரு. பிராண்டனது வீட்டிற்குள் புகுந்து பின்புறமாக ஓடினார்கள். அவர்கள் அந்த வீட்டிலடைக்கலம் புகுந்திருக்கிறார்கள் என்று கருதி திரு. பிராண்டன் வீட்டின் மீது கல்லெறிந்து வீட்டை துஷ்பம் பண்ணினார்கள். பின் அந்நால்வரும் கைதியாயினர்.

சென்ற சில தினங்களாக பிள்ளை பிடிக்கும் கொள்ளைக் கூட்டத்தார் பிள்ளைகளைப் பிடித்துக் கொலைசெய்கிறார்களென்றும் ஆதலால் ஜனங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும் பாஸிஸ எதிர்ப்பு சங்கத்தார் தெருக்கள் வழியாக ஒலி பெருக்கி மூலம் எச்சரிக்கை செய்துகொண்டு சென்றார்கள். சென்ற 24 மணி நேரத்தில் 12 குழந்தைகள் கடத்திச் செல்லப்பட்டனர். குளித்துக் கொண்டிருந்த ஒரு சிறுமியைத் தூக்கிச் செல்ல முயன்ற ஒருவனை ஆத்திரங்கொண்ட ஜனங்கள் கூடிப் பிடித்து அவனை சித்திரவதை செய்தார்கள். மற்றுமொருவன் ஒரு சிறுமியை அவளது பெற்றோர்களிடமிருந்து தூக்கிச் செல்ல முயன்றபோது ஜனங்கள் கூடி அவனைத் தாக்கினர் இது சம்பந்தமாக போலிஸார் அநேகரைக் கைது செய்திருக்கிறார்கள்.

பர்மா மந்திரிகள் கொலை வழக்கு

இன்று நடைபெற்ற பர்மா மந்திரிகள் கொலை வழக்கு விசாரணையில் 5 எதிரிகள் கொடுத்த வாக்குமூலங்கள் வாசிக்கப்பட்டன. பர்மா மந்திரிகள் கொலை செய்யப்படுவதற்கு முன்னமே பர்மாவில் நடைபெற்றுவந்த பயங்கரக் குற்றங்களைப் போலிஸார் அடக்காமல் அஜாக்கிரதையாக இருந்தார்களென்று எதிரி தரப்பு பிரிட்டிஷ் வழக்கறிஞரான வெர்ட்டனஸ் விவாதித்தபோது அவருக்கும் சார்க்கார் வழக்கறிஞருக்குமிடையே தர்க்கம் நடைபெற்றது.

பர்மா மந்திரிகள் கொலை செய்யப்பட்ட பின்பு 8000 பேர்கள் கைது செய்யப்பட்டார்களென்றும் அவர்களில் பாதிப் பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்களென்றும் சர்க்கார்வழக்கறிஞர் கூறினர். (ராய்ட்டர்)

எஞ்சின் டிரைவரைக் கொலை புரிய முயற்சி

கொழும்பு, நவ. 1

இலங்கை ரயில்வே எஞ்சின் டிரைவர் எல் ஈ. டி. சில்வா என்பவரை கொலைபுரிய முயற்சித்ததாக எஞ்சினில் கரி தள்ளும் வேலை செய்யும் டி. பி. கிரிபண்டா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதி எதிரிக்கு 10 வருடச் சிறைத் தண்டனை விதித்தார்.

ஆஸ்டிரிய எண்ணெய்த் தொழிற்சாலை

ரஷியா கைப்பற்றியது: அமெரிக்க எதிர்ப்பு

வாஷிங்டன், அக். 30

ஆஸ்டிரியாவிலுள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலை ஒன்றை ரஷியா கைப்பற்றியிருப்பதை உத்தியோகதோரணையில் எதிர்த்திருப்பதாக அமெரிக்க அரசியல் இலாகா அறிவித்துள்ளது.

மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ ஸ்தானிகரும் இதை எதிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளார்.

இந்த எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலையே அப்பகுதியில் மிகப் பெரியதென்றும் பிரிட்டிஷ், அமெரிக்க, டச்சு முதலாளிகளுக்குச் சொந்தமானதென்றும் அறியப்படுகிறது. கடந்த ஆகஸ்டில் சோவியத் பிரதேசத்திலுள்ள ஜெர்மன் வர்த்தகம் என்ற சாக்கோடு ரஷிய ராணுவம் இதன் அதிகாரத்தைக் கைக்கொண்டது. [ராய்ட்டர்]

சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள்

கைச்சாத்திடப்பட்டன

ஜினிவா, அக். 30

உலகச் சரித்திரத்திலே யே ஒப்புவமையில்லா சர்வ தேச ஒப்பந்தங்கள் இன்று இங்கு கைச்சாத்திடப்பட்டன. 25 நாடுகளின் பிரதிநிதிகள் 123 சுங்க வரி ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்கள். இந்த வைபவத்திற்கு பெல்ஜியம் பிரதிநிதி திரு. கூட்டனஸ தலைமை வகித்தார். இந்த ஒப்பந்தங்கள் ஏற்பட சுமார் 6 மாத காலமாக சமரசப் பேச்சுகள் நடைபெற்றன. பல நாடுகளின் தூதுக்கோஷ்டியினர் ஆயிரம் தடவைகளுக்கு மேல் கூடி பேச்சு வார்த்தை நடத்தினர். இந்த ஒப்பந்தம் உலகப் பொருளாதார உயர்வுக்கு அடிகோலியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியாவின் சார்பாக திரு. எஸ். ரங்கநாதனும் பாக்கிஸ்தான் சார்பாக திரு. எச். ஜ. ரஹிமதுல்லாவும் இலங்கையின் சார்பாக திரு. ஜி. சி. எஸ். கொரியாவும் பர்மாவின் சார்பாக உ நியுனும் கைச்சாத்திட்டார்கள். நவம்பரில் ஹாவனாவில் உலக வர்த்தக மகாநாடு நடைபெறுவதற்கு முன்று தினங்களுக்கு முன் நவம்பர் 18-ம் தேதியன்று ஒப்பந்தங்களின் விவரங்கள் வெளியிடப்படும். (ராய்ட்டர்)

விவசாயிகள் நிலை உயர வேண்டும்

டைரக்டர் அறிக்கை விவாதம்

ஆசியா தொழிலாளர் மகாநாடு

புதுடில்லி, அக். 30

சர்வதேச தொழில் ஸ்தாபன டைரக்டர் ஜெனரலின் அறிக்கை மீது இன்று ஆசிய தொழிலாளர் மகாநாட்டில் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. நிலஅனுபவம், விவசாயிகள் நிலைமை முதலிய பிரச்னைகள் சம்பந்தமாக இந்தியாவின் அபிப்பிராயமே பாக்கிஸ்தானின் அபிப்பிராயமென்று பாக்கிஸ்தான் ஹை கமிஷனர் சாஹிக் ஹுசைன் மகாநாட்டில் தெரிவித்தார். விவசாயிகள் நிலைமையை அபிவிருத்தி செய்தால்தான் ஆசியமக்கள் வாழ்க்கைத் தரம் உயருமென்றும் அதே சமயத்தில் மேலைநாடுகளைப் போன்று ஆசிய நாடுகளின் கைத்தொழில் நிலைமையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளி

இந்திய தொழிலாளர் பிரதிநிதி திரு. கெட்டிகர் பின்வருமாறு தெரிவித்தார்:- ஆசிய தொழில் ஸ்தாபன கமிட்டி ஒன்று நிரந்தரமாக இருந்து வேலை செய்யவேண்டும். அதில் தொழிலாளர் பிரதிநிதிகளும் முதலாளிகள் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர் நிலைமையை அபிவிருத்திசெய்ய முயற்சிகள்எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

ஆசிய பொருளாதாரக் கமிஷன்

ஐக்கியதேச ஸ்தாபனப் பிரதிநிதியான மிஸ் எலினர் ஹில்டர் பின்வருமாறு தெரிவித்தார்:- பிலிப்பைனில் ஆசிய பொருளாதாரக் கமிஷனின்கூட்டம் நடைபெறப் போகிறது. ஆசிய நிலைமை பற்றி அது விரிவான ஆராய்ச்சி செய்யும் பிரிவினைக்கு மூன் இந்தியா ஊர்ஜிதம்செய்த ஒப்பந்தங்கள் பாக்கிஸ்தானால் ஊர்ஜிதம் செய்யப்பட்டதாகக் கருதப்படவேண்டுமென்று பாக்கிஸ்தான் தொழிலாளர் பிரதிநிதி டாக்டர் மாலிக் தெரிவித்தார். இந்திய சமஸ்தானங்கள் இம்மகாநாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்குமென்று பரோடா சமஸ்தான தொழில் மந்திரி பரன்லால் முன்ஷி தெரிவித்தார். (அ-பிரஸ்)

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.

புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரோச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

இன்று காண்பிக்கப்படுவது! புத்தம் புதிய படம்!!

மகத்தான 2-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நவநீர் திறம்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன்அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org